யு.கே பைத்துர் ரஹீம் பள்ளிவாசல் திறப்பு விழாவின் போது ஹுஸூர் அன்வர் அவர்கள் ஆற்றிய உரை பக்கம் 3

இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) (தொடர்-3) பக்கம் 9

பராஹீனே அஹ்மதிய்யா (தொகுதி 1, 2) (தொடர்-2) பக்கம் 14


இவ்வுலக வாழ்கை நிலையற்றது (தொடர்ச்சி) பக்கம் 20

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | December 2025 | Vol. 5 - Issue No. 1
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311





# திருக்குர்ஆன்

وَالْعَصْرِ ۙ﴿٢﴾
اِنَّ الْاِنْسَانَ لَفِىْ خُسْرٍ ۙ﴿٣﴾
اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
وَتَوَاصَوْا بِالْحَقِّ ۙ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ﴿٤﴾

(முஹம்மது ரஸுலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய) காலத்தை நான் சான்றாகக் காட்டுகிறேன்.

நிச்சயமாக, மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான்.

ஆயினும் நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்து, உண்மையைக் கொண்டு ஒருவருக்கொருவர் அறிவுரை கூறி, பொறுமையுடன் செயலாற்றுமாறு ஒருவருக்கொருவர் அறிவுரை கூறிவருபவர்களைத் தவிர. (அவர்கள் என்றும் இழப்பிற்காளாக மாட்டார்கள்.) (103:2–4)



# ஹதீஸ்

قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لِرَجُلٍ وَهُوَ يَعِظُهُ: "اغْتَنِمْ خَمْسًا قَبْلَ خَمْسٍ: شَبَابَكَ قَبْلَ هِرَمِكَ، وَصِحَّتَكَ قَبْلَ سَقَمِكَ، وَغِنَاءَكَ قَبْلَ فَقْرِكَ، وَفَرَاغَكَ قَبْلَ شُغْلِكَ، وَحَيَاتَكَ قَبْلَ مَوْتِكَ

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு மனிதருக்கு அறிவுரை கூறும்போது கூறினார்கள்: ஐந்து விஷயங்கள் வருவதற்கு முன்பு ஐந்து விஷயங்களை நீ பயன்படுத்திக் கொள்.

1. முதுமை வருவதற்கு முன்பு உனது இளமை.
2. நோய் வருவதற்கு முன்பு உனது ஆரோக்கியம்.
3. வறுமை வருவதற்கு முன்பு உனது செல்வம்.
4. உனக்கு வேலைப்பளு வருவதற்கு முன்பு உனது ஓய்வு.
3. உனக்கு மரணம் வருவதற்கு முன்பு உனது வாழ்க்கை.

(ஹதீஸ் – ஹாகிம் 7846)




ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23.11.2025 அன்று யு.கே, வேல்ஸில் உள்ள கார்டிஃப்-ல் பைத்துர் ரஹீம் பள்ளிவாசல் திறப்பு விழாவின்போது விருந்தினர்களுக்காக ஆற்றிய உரை

**தமிழாக்கம்: மவ்லவி இப்னு வஸீம்**

கண்ணியத்திற்குரிய உறுப்பினர்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ – அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அருள்களும் உங்கள் அனைவர் மீதும் உண்டாகட்டுமாக.

நம்முடைய கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் அனைவரையும் நான் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரவேற்கின்றேன். நீங்கள் எங்களுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டீர்கள். மேலும் பள்ளிவாசல் திறப்பு விழாவின் தருணத்தில் நீங்கள் இங்கு வந்திருக்கின்றீர்கள். நீங்கள் இங்கே வந்திருப்பது மார்க்க மற்றும் ஆன்மிக ரீதியிலான நிகழ்ச்சியாக இருக்கின்றது. இது உண்மையில் உங்களுடைய பரந்த மனப்பான்மை மற்றும் உயர்ந்த நல்லொழுக்கத்தைக் காட்டுகின்றது.

இந்தப் பள்ளிவாசலின் நோக்கம் ஒவ்வொரு பள்ளிவாசலின் உண்மையான நோக்கமாக இருக்கக்கூடிய அந்த நோக்கம்தான். அதாவது மக்கள் அல்லாஹ்வை வணங்கு –வதற்காக ஒன்றுகூடக்கூடிய இடமாகும். பிறகு எங்கெல்லாம் நாங்கள் பள்ளிவாசல் கட்டுகின்றோமோ அங்கு நம்முடைய அண்டை அயலார்கள் மற்றும் உள்ளூர் மக்களுடன் ஒரு நல்ல தொடர்பை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் இருக்கின்றது. நம்முடைய எல்லாப் பள்ளிவாசல்களிலிருந்தும் ஒரேயொரு தூதுச் செய்திதான் நிரந்தரமாக எழுப்பப்படுகிறது. எவ்வாறு அல்லாஹ்வை வணங்கக்கூடியதாக அவை இருக்கின்றனவோ அதே போன்று உலகில் அமைதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தையும் வளர்ப்பதற்கு காரணமாக அமைகின்றது.

எனவே இன்று இந்த உயர்வான நோக்கங்களை முழுமைப்படுத்துவதற்காகவே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மிகவும் மகிழ்ச்சியுடன் Wales –ல் நம்முடைய முதலாவதாக கட்டப்படும் இந்தப் பள்ளிவாசலை திறப்பதற்கான நல்வாப்பை பெறுகின்றது; இன்று மகிழ்ச்சியடைகின்றது. அஹ்மதி முஸ்லிம்கள் இங்கு துஆவுக்காக ஒன்றுகூடும் போது முழு மனித குலத்தின் அமைதி, சமாதானத்திற்காகவும் துஆ செய்வார்கள். இஸ்லாத்தைப் பற்றி பரப்பப்பட்டுள்ள தவறான புரிதலின் காரணமாக சில மக்களிடம் ஒரு சஞ்சலம் இருக்கும். ஒரு மனஉளைச்சல் இருக்கும். அவர்களுடைய உள்ளத்தில் கேள்விகளும் எழும்பிக் கொண்டேயிருக்கும். ஒரு முஸ்லிம் சமூகம் இங்கு பள்ளிவாசல் கட்டியிருக்கின்றது. இஸ்லாம் பற்றி தப்பெண்ணம் கொண்டிருப்பவர்கள் இருப்பார்கள். நான் தெளிவுபடுத்துகின்றேன். இந்த சமூகத்தில் எங்களுடைய பள்ளிவாசல் அமைதியின்மையை ஏற்படுத்துவற்காக கிடையாது. உண்மையில் நம்முடைய பள்ளிவாசல்கள் அமைதி, சமாதானம், அன்பு, நேசம், மத நல்லிணக்கம் ஆகியவற்றிற்கான உயர்வான

குறிக்கோள்களுக்காக கட்டப்படுகின்றன. மேலும் எங்களுடைய மார்க்கத்தின் அடிப்படையான அந்த நோக்கங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தில் சில தீய இயல்புடைய மக்கள் ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். அது துன்பத்தை ஏற்படுத்துவதற்காக கட்டினார்கள். மக்களுக்கு கஷ்டத்தை கொடுப்பதற்காக கட்டினார்கள். அப்பொழுது அல்லாஹ் கண்ணியத்திற்குரிய நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அந்தப் பள்ளிவாசலை அதாவது பெயருக்காக இருந்த அந்தப் பள்ளிவாசலை அழித்து விடுமாறு கட்டளை இட்டிருந்தான். அந்த பள்ளிவாசலின் அசல் நோக்கம் செங்கல்களால் கட்டப்படுவது மட்டும் கிடையாது. உண்மையில் ஒரு பள்ளிவாசல் எப்பொழுது உண்மையான பள்ளிவாசல் என்று அழைக்கப்படுமோ எப்போது தனது நோக்கத்தைப் பெறும் என்றால், அது அல்லாஹ்வை வணங்கக் கூடிய இடமாக இருக்க வேண்டும். இஸ்லாமிய போதனைகளைப் பரப்பக்கூடிய இடமாக இருக்க வேண்டும். முழு மனித குலத்திற்கும் அனுதாபம், அன்பு ஆகியவற்றைப் பரப்பக் கூடியதாக இருக்க வேண்டும். முழு சமுதாயத்திலும் அமைதி மற்றும் சமாதானத்தைப் பரப்பக்கூடிய தலைமையகமாக அது இருக்க வேண்டும்.

இந்த விஷயத்தை நான் மீண்டும் கூறுகின்றேன். யாரெல்லாம் பள்ளிவாசல் சமுதாயத்தின் அமைதி மற்றும் சமாதானத்தை சீர்குலைத்து விடுமோ என்று அஞ்சுகிறார்களோ அவர்கள் நன்றாக திருப்தியாக இருந்து கொள்ளுங்கள். இந்தப் பள்ளிவாசல் அமைதி, சமாதானத்தைப் பரப்பக்கூடிய இடமாக இருக்கும். எந்தவொரு தீமை அல்லது குழப்பத்தைப் பற்றி அவர்கள் கற்பனை கூட செய்து பார்த்திருக்க முடியாது.

பிறகு நாம் நம்முடைய போதனைகள், வரலாறு மற்றும் செயல் அடிப்படையில் ஒரு விஷயத்தை தெளிவுபடுத்து –கின்றோம். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எப்பொழுதும் உலகில் அமைதியை நிலைநாட்டுவதில் முன்னணி வகித்துத்துள்ளது. எங்களுடைய வரலாறு இந்த விஷயத்திற்கு சான்று பகர்கின்றது. நாங்கள் எப்பொழுதும் எல்லா மனித குலத்தின் உரிமைகளையும் பாதுகாத்திருக்கின்றோம். அவர்களுடைய மார்க்கம் அல்லது அவர்களது கொள்கை என்ன வேண்டுமானாலும் இருக்கட்டும். இஸ்லாத்தின் போதனைகளை விட்டு விலகியவாறு ஏதோ செய்கிறோம் என்பது கிடையாது. மாறாக, உண்மையான இஸ்லாமிய போதனைகளைத்தான் நாங்கள் பரப்புகின்றோம். அதனால்தான் இந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய மார்க்கத்தின் போதனைகள் எங்களுக்கு கற்றுக் கொடுப்பது என்னவென்றால் மற்றவர்களின் உரிமைகளைப் பொருட்படுத்தாத முஸ்லிம் –களுடைய அந்த இறைவணக்கங்கள் பயனற்றவையாகும். அல்லாஹ்வின் பார்வையில் அவை விரும்பத்தகாதவையாகும். மாறாக அல்லாஹ்வை கோபப்படுத்தக் கூடியவையாகும்.




அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: அதாவது தொழுகையில் கவனமற்றவர்களாக இருக்கக் கூடியவர்களுக்கு அந்த தொழுகை அவர்களுக்கு சாபமிடுகிறது. அதாவது அவர்களுடைய துஆக்கள் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப் –படுவதில்லை. அதன் பின்னணியை நாம் பார்க்கும்போது மற்ற வசனங்கள் இதனை விளக்குகின்றன. இதற்கு முன்னுள்ள வசனத்தில் கூறப்பட்டுள்ளது. சமூக உரிமைகள், அனாதைகள், ஏழைகளின் உரிமைகளைப் பற்றி கூறுகின்றது. அதற்குப் பிறகு அடுத்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட மக்களின் துஆக்கள் மேலோட்டமாக இருக்கின்றன. அவை மக்களுக்கு காட்டுவதற்காக செய்யப்படுகின்றன. அவர்களுடைய தொழுகைகள் அவர்களுடைய நயவஞ்சகம் மற்றும் ஏமாற்றத்தை வெளிப்படுத்தக் காரணமாக இருக்கின்றன.

இந்த சூராவில் கடைசி வசனத்தில் அல்லாஹ் சுயநலமுடைய அந்த மக்களைப் பற்றி கூறுகின்றான். சுயநலவாதிகளைப் பற்றி கூறுகின்றான். அவர்கள் தேவையுடையவர்களுக்கு உதவி செய்ய மறுக்கின்றார்கள். இந்த மக்கள் உதவி செய்வதில் மட்டும் தோல்வியடைந்திருப்பதில்லை. மற்றவர்களையும் உதவி செய்ய விடாமல் தடுக்கின்றார்கள். இவர்களது உள்ளம் எந்த அளவு கசப்பாகி விட்டதென்றால், எந்த அளவு அவர்களது உள்ளம் இறுகி இருக்கின்றதென்றால், அவர்கள் தற்காலிகமாகக் கூட அவர்களால் புரிந்து கொள்ள முடியாது.

அல்லாஹ் தெள்ளத் தெளிவாக கூறுகின்றான்: தொழுகைகள் மற்றும் இறைவணக்கங்கள் எப்பொழுது பயனளிக்கும் என்றால், ஏற்றுக் கொள்ளப்படும் என்றால், தாக்கமளிக்கக் கூடியதாக இருக்கும் என்றால், இறைவனது அவையில் அது எப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படும் என்றால் அது மனித குலத்திற்கு தொண்டாற்றுவதோடு செய்யப்படும்போது தான். இதுதான் இஸ்லாத்தின் அடிப்படையான போதனையாகும்.

திருக்குர்ஆனின் சூரா அல் பலத் –ன் 11–வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: நாம் இரண்டு வழிகளின் பக்கம் மனிதனுக்கு வழிகாட்டி இருக்கின்றோம். இந்த வசனத்தில்

அல்லாஹ் தெளிவாக கூறுகின்றான். திருக்குர்ஆன் நன்மை மற்றும் தீமையை அடையாளமிட்டு, அடிக்கோடிட்டுக் காட்டி இருக்கின்றது. உண்மை மற்றும் பொய்யிற்கான எல்லைகளை மிகவும் தெள்ளத் தெளிவாக எடுத்து வைத்திருக்கின்றது. ஒரு மனிதர் தவறான வழியில் செல்கிறார் என்றால், அதற்கான பொறுப்பாளி அவர்தான். மனிதனுக்கு அல்லாஹ் திறமையை வழங்கி இருக்கின்றான். எது நன்மை? எது தீமை? என்று பிரித்தறியக்கூடிய அறிவை வழங்கி இருக்கின்றான். உலகத்தைப் பார்ப்பதற்கு நமக்கு இந்தப் பௌதிகமான கண் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று அல்லாஹ் நமக்கு ஓர் ஆன்மிகக் கண்ணையும் வழங்கி இருக்கின்றான். ஒரு




நல்லொழுக்கத் திறனை வழங்கியிருக்கின்றான். அது நம்மை வழிநடத்துகின்றது. ஆனால் ஒரு நபர் தன்னிடம் இருக்கக்கூடிய அந்த நல்லொழுக்கத் திறமையை கண்டும் காணாமல் விட்டு விட்டு அன்றாடம் உலக ஆசைகளைப் பின்பற்றுவதில் சென்று விட்டார் என்றால் கண்டிப்பாக நன்மையை விட்டு விலகி தீமையை மேற்கொள்ள ஆரம்பித்து விடுவார். நான் ஏற்கனவே கூறியது போன்று திருக்குர்ஆன் எல்லாக் கோணத்திலும் எது சரி? எது தவறு? என்ற இந்த விஷயத்தை எடுத்துக் கூறி விட்டது.

உதாரணமாக, சூரா அல் பலத் –ன் 14–வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: ஓர் அடிமையை விடுவிப்பது நன்மையின் மிகவும் உயர் தரத்தில் எண்ணப்படுகிறது. இஸ்லாத்திற்கு முன்னிருந்த காலத்தில் அரபு நாட்டில் அடிமைத்துவம் ஒரு சாதாரண வழக்கமாக இருந்தது. ஆனால் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் இது தொடர்பான தெள்ளத் தெளிவாக அடிமைகளை விடுவிக்க வேண்டும் என்ற ஒரு வழிகாட்டலை, கட்டளையை வழங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாமும் முன்மாதிரியாக செய்து காட்டினார்கள். அன்னாரின் கட்டுப்பாட்டில் வந்த அனைத்து அடிமைகளும் விடுவிக்கப்பட்டார்கள்.

ஆக இஸ்லாம், முழு உலகிலும் உள்ள அடிமைத்துவத்தின் எல்லா விதமான சிந்தனைகளையும் முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது. நீங்கள் நினைக்கலாம். இன்றும் கூட உலகில் அடிமைகள் இருக்கின்றார்களா? இன்றும் கூட இந்த அடிமைகளை விடுவிப்பது பற்றி பேச வேண்டுமா? என்ன என்று யோசிக்கலாம். வெளிப்படையாகப் பார்க்கும்போது அடிமைத்தனம் இல்லாமல் ஆகி விட்டதுதான். ஆனால் ஒரு புது விதமான அடிமைத்தனம் இன்றும் இருக்கின்றது. இன்றும் கூட சமூக ரீதியான அடிமைத்துவம் இருக்கின்றது. அது பல பேரை தனது பிடியில் எடுத்துக் கொண்டுள்ளது. அதை பொறுத்துக் கொள்ள முடியாது. பலர் கடன்களில் ஆழ்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய அந்த இயற்கை வளங்களை வல்லமைமிக்க நாடுகள் பறித்துக் கொள்கின்றன. அவற்றிலிருந்து பலன் பெறுகின்றன. இஸ்லாம் இப்படிப்பட்ட சலுகையைத் தடுக்கின்றது. அது அடிமைத்தனத்தின் ஒரு வகையாகும். அதை முழுக்க முழுக்க முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். ஏனென்றால் இந்த நீதியின்மையின் காரணமாகவே சமூகத்தில் அமைதிக்கான அடித்தளம் சீர்குலைக்கப்படுகிறது. இன்றைய காலத்தில் நாம் தெளிவாகப் பார்க்கின்றோம். திருக்குர்ஆன் சமூகத்திற்காக நாம் வெளிப்படுத்த வேண்டிய அனுதாபத்தைப் பற்றி நமக்கு போதிக்கின்றது.

மேலும் சூரா அல் பலத் உடைய அடுத்த வசனங்களில் இவ்விஷயம் தெளிவுபடுத்தப்படுகிறது. அடுத்த வசனம் 15–ல் பசித்தவருக்கு உணவளிப்பது ஒரு மாபெரும் நன்மையாகக் கூறப்பட்டுள்ளது. 16–வது வசனத்தில் இது ஏழை மற்றும் பலவீனமான மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறப்படுகின்றது. ஏழையாக இருக்கக் கூடியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறுகின்றது. இது மிகவும் ஆழமானது. முஸ்லிம்கள் அந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். மிகவும் மோசமான நிலையில் இருக்கக் கூடியவர்கள், உதவியற்றவர்களாக இருப்பவர்கள், அவர்களுக்கு உதவி செய்ய யாரும் இல்லாதவர்கள், சமூகம் மறந்து விட்ட மக்கள், சில மக்களுக்கு அவர்களுடைய குடும்பங்கள், நண்பர்கள் இருப்பதனால் அவர்கள் கருத்தில் கொள்ளப்படுகிறார்கள். ஆனால் முஸ்லிம்களுக்கு என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால், யாருக்கு உதவியாளர்கள் யாரும் இல்லையோ அவர்களை நீங்கள் கண்காணியுங்கள். யாருக்கு உறவினர்கள் இல்லையோ அவர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றது. சமூகத்தில் ஒரு நபர் முற்றிலும் ஆதரவற்றவராக இருக்கின்றார் என்றால் அவருக்கு உதவி செய்யப்பட வேண்டும். இயன்ற அளவு அவருக்கு ஏற்பாடு செய்ய முயற்சிக்க வேண்டும். உலகின் எல்லா நாடுகளிலும் குறிப்பாக முஸ்லிம் நாடுகளிலும் இந்த ஒற்றுமைபடுத்தக்கூடிய மற்றும் உயர்வான விஷயங்களின்படி அமல் செய்தால் இதற்கு ஒரு மாபெரும் தாக்கங்கள் வெளிப்படும். நிச்சயமாக இதன் விளைவாக சமூகத்தில் பரவி இருக்கக்கூடிய அநீதியின்மை, வரம்பு மீறுதல், அறிவீனம் ஆகியவற்றின் சுவர்கள் இடித்துத் தள்ளப்படும். அவற்றிற்குப் பதிலாக அந்த

இடத்தில் அன்பு, கருணையுள்ளம், ஒருவரையொருவர் புரிவதற்கான உயர்வான ஒரு நிலை வந்து விடும். உண்மையான அமைதி மற்றும் பாதுகாப்பு வந்து விடும்.

சந்தேகமின்றி, திருக்குர்ஆனின் போதனைகள் உலகளாவிய அந்தஸ்தைக் கொண்டிருக்கின்றன என்று நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். எனவே ஒருவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் சரி அவர் இந்த போதனைகளின்படி அமல் செய்தார் என்றால், உலகம் மிகவும் அமைதி வாய்ந்ததாக ஆக முடியும். இந்த நோக்கம்தான் முழு மக்களுக்கும் நடுவில் அமைதி மற்றும் நன்மையை நிலைநாட்டக்கூடியதாக இருக்கின்றது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்ச்சியாக இதனை செய்து கொண்டிருக்கின்றது. நாம் முழு மக்களுக்கும் அவர்களுடைய மார்க்கம், மதம் என்னவாக இருக்கட்டும். இந்த முயற்சியில் இறங்குவதற்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். உலகில் அமைதி, சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றை வளர்ப்பதற்கு நாம் ஒன்றுசேர வேண்டும். இதுதானே திருக்குர்ஆனின் போதனையாகும்.

உதாரணமாக, திருக்குர்ஆனின் சூரா அந்நிஸாவின் 37–வது வசனத்தில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால், ‘‘அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனுக்கு யாரையும் இணையாக்காதீர்கள். பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நெருங்கிய உறவினர்கள், ஏழைகள், அனாதைகள் மற்றும் அண்டை அயலாரான உறவினர்கள் ஆகியோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் உறவினர் அல்லாத அண்டை அயலாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். உங்களுடன் அமர்பவர்களுடனும், பயணிகளுடனும் மேலும் உங்களது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக ஆணவம் கொண்டவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை.’’ அல்லாஹ்வுடைய உண்மையான வணக்கங்–களைப் பற்றி கட்டளை வழங்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் சேர்த்து முழு மனித குலத்திற்கான போதனை வழங்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் அடிப்படையில் முதலில் மனிதன் பெற்றோருடன் அன்பு நேசம் மென்மையுடன் நடந்து கொள்ளுமாறு போதிக்கப்படுகின்றது. பெற்றோரைக் கண்டும் காணாமல் இருப்பது குடும்ப ஒற்றுமையை சீர்குலைக்கின்றது. இதன் விளைவாக சமூகத்தில் கூடுதல் சுமை ஏற்படுகிறது.

எனவே மற்றவர்களைப் பற்றி கருத்தில் கொள்வதைப் பற்றி அல்லாஹ் முதலில் தனது வீட்டிலிருந்து மனிதன் ஆரம்பிக்குமாறு கூறுகின்றான். ஒரு முஸ்லிம் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களைப் பற்றியும் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்களுடைய உரிமைகளையும் செலுத்த வேண்டும். இந்த வசனம் முஸ்லிம்களுக்கு அனாதைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இழப்பிற்கு உள்ளானவர்கள் அல்லது பலவீனமானவர்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது.

இந்த வசனம் முஸ்லிம்களுக்கு அவர்கள் தம்முடைய அண்டை அயலார்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது. அவர்கள் அறிந்தவர்களோ அல்லது அறியாதவர்களோ யாராக இருக்கட்டும்! அவர்கள் தொலைவில் இருந்தாலும் சரி. அவர்களுடன் வேலை செய்பவர்களும் இதில் இருக்கின்றார்கள். இந்த வசனம் முஸ்லிம்களுக்கு தன்னுடன் பயணிக்கக் கூடியவர்களுக்கு நல்ல முறையில் போதிக்குமாறும் இஸ்லாம் வழிகாட்டல் வழங்கியுள்ளது. பயணத்தின் போது மனிதன் யாரை சந்திக்கின்றானோ அவருக்கு நன்மையை நாட வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. அது இரயில் பயணமோ, பஸ் பயணமோ, விமானப் பயணமோ அல்லது வேறு எந்தப் போக்குவரத்தாக இருந்தாலும் சரி தன்னுடன் பயணம் செய்பவர்களுடன் அன்புடனும் பாசத்துடனும் கனிவுடனும் நல்லொழுக்கத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். அவர்களைப் பாதுகாக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு கண்ணியம் அளிக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: உங்களுக்கு கீழ் இருப்பவர்–களையும் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றான். அரசாங்கத்தில் யார் அதிகாரத்தில் வீற்றிருக்கின்றார்களோ அவர்கள் ஒருபோதும் தம்முடைய ஆற்றலை தவறாகப் பயன்படுத்தக் கூடாது. அதிகார துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. அல்லாஹ் இது போன்ற விஷயங்களை விரும்புவதில்லை. இந்தக் குறிப்பிட்ட நேரத்தில் சில வசனங்களை மட்டும்தான் நான் எடுத்துக் கூறியுள்ளேன். ஆனால் திருக்குர்ஆன் துவக்கத்திலிருந்து இறுதி வரை இது போன்ற பொன்னான கோட்பாடுகளால் நிறைந்து காணக் கிடைக்கின்றது. முஸ்லிம்களுக்கு உயர் நல்லொழுக்கத்தைப் பேண வேண்டும் மற்றும் சட்டத்தைப் பேண வேண்டும் என்று வேண்டுகின்றது.



உதாரணமாக, முஸ்லிம்கள் தங்களுடைய அதிகாரி–களுக்கு கட்டுப்பட வேண்டும் என்று கட்டளை இடுகின்றது. தங்களது நாட்டுடன் நன்றியுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும் என்று முஸ்லிம்களுக்கு போதனை வழங்கப்–பட்டுள்ளது. அதை ஈமானின் கட்டாயப் பகுதியாகக் கருத வேண்டும். எவர்கள் இஸ்லாத்துடன் சாதாரண தொடர்பு கொண்டிருக்கிறார்களோ அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவது, பள்ளிவாசலின் நோக்கத்தை முழுமைப்படுத்துவது இவையெல்லாம் உயர் நல்லொழுக்கதை மேற்கொள்ளாமல் சாத்தியப்படவே முடியாது. மனிதகுலத்திற்கு தொண்டு செய்யாமல் இவைகள் சாத்தியப்படாது. அண்டை அயலாரின் உரிமைகளைச் செலுத்த வேண்டும் என்று திருக்குர்ஆன் வலியுறுத்திக் கூறியுள்ளது.

இந்தப் பள்ளிவாசலுக்கு தொழ வருபவர்களது கடமை என்னவென்றால், உங்கள் அனைவரையும் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். உங்களுடன் அனுதாபத்தோடு அணுக வேண்டும். மேலும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஏதாவது ஒரு வகையில் இன்னல்களில் ஆழ்ந்திருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அனாதைகள் இருக்கின்றார்கள். பசித்தவர்கள் இருக்கின்றார்கள், ஏழைகள், பலவீனமானவர்கள், நோயாளிகள் இருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல் யாரெல்லாம் இந்தப் பள்ளிவாசலுக்கு வருவார்களோ அவர்களிடம் அமைதி நிறைந்த அந்த சட்டத்தைக் கடைபிடிக்க வேண்டும். மேலும் அதிகாரிகளுக்கு கட்டுப்படக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நான் நம்புகின்றேன். நீங்கள் இந்த விஷயத்தை ஒப்புக் கொள்வீர்கள். இதுபோன்ற பண்புகளைக் கொண்ட மக்களைப் பற்றி அஞ்ச வேண்டிய தேவையேயில்லை.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் வாதம் மட்டும் செய்வதில்லை. மற்றவர்களை தாக்கத்திற்குள்ளாக்க வேண்டும் என்பதற்காக மட்டும் பேசுவதில்லை. மாறாக நாங்கள் எங்களுடைய போதனைகளை முழுமையாக அமல் செய்தல் மற்றும் ஈமானின் முழு தேவைகளையும் முழுமைப்படுத்து–வதற்கான முழுமையான எண்ணம் கொண்டிருக்கின்றோம்.

சுருக்கமாக சொல்லப்போனால், நாங்கள் இந்தப் போதனைகளையே போதிக்கின்றோம். இதனையே தப்லீக் செய்கிறோம். முன்னேற்றமடைந்த நாடுகளில் ஏழைகள் மற்றும் வறியவர்களுக்கான மருத்துவமனைகள் மற்றும் அவர்களுக்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்கின்றோம். வெளிப்படையாக அவர்கள் கொள்கைகள் என்ன வேண்டுமானாலும் இருக்கட்டும். அவர்களுக்கும் உதவி செய்கின்றோம். இறைவன் மீது ஈமான் கொள்ளாதவர்களுடனும் நம்மவர்களைப் போன்று நடந்து கொள்ளப்படுகிறது. உலகின் தொலை தூரத்தில் உள்ள பின்தங்கிய இடங்களில் தூய தண்ணீர் கிடைப்பதற்காக நாங்கள் தண்ணீர் பம்பு செய்து கொடுக்கின்றோம். நாங்கள் அங்கு கிணறுகள் அமைத்துக் கொடுக்கின்றோம். மேற்கத்திய நாடுகளில் மக்கள் தண்ணீருக்கான உண்மையான புரிதல் அவர்களுக்கு இருக்காது. குறைவாக முன்னேற்றம் அடைந்த நாடுகளில் சில மக்களுக்கு தண்ணீர் கொண்டு சேர்ப்பது எவ்வளவு கடினமான விஷயம். ஸ்கூல் சென்று பள்ளிக் கல்வியைப் படிப்பதற்குப் பதிலாக பல பிள்ளைகள் பல மைல்கள் பயணம் செய்து வீட்டிற்காக தண்ணீர் கொண்டு வருகிறார்கள். இதிலிருந்து அவர்களுடைய எதிர்காலம் மிகவும் எதிர்மறையான தாக்கத்திற்கு உள்ளாகிறது; பாதிக்கப்படுகிறது. அவர்களுக்கு உதவி செய்யப்படவில்லை என்றால் பிறகு அவர்களின் ஏழ்மை வட்டம் அவர்களைச் சுற்றியே இருக்கும். எனவே நாங்கள் அப்படிப்பட்ட இடங்களை அடையாளம் இடுகின்றோம்.




அவர்களின் தேவைகளை உடனடியாக பார்க்கின்றோம். எங்கள் பொறியாளர்கள், திறமையுள்ள மக்களை அங்கு அனுப்புகின்றோம். அங்கு அவர்களது வீட்டின் வாசல் வரை தூய தண்ணீரைக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம்.

இதுபோன்று இந்த நிவாரணப் பணிகள் ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும், தென் அமெரிக்காவிலும், பிற வளர்ச்சி குன்றிய பகுதிகளிலும் நடைபெறுகிறது. நாங்கள் பல்வேறு அனாதை இல்லங்களையும் உருவாக்கி இருக்கின்றோம். நாங்கள் உலகின் மிகவும் பலவீனமான மற்றும் ஆதரவற்றை பிள்ளைகளுக்கு ஆதரவளித்திருக்கின்றோம். கல்வியைப் பொருத்தவரை வளர்ந்து வரும் நாடுகளில் நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களை உருவாக்கி இருக்கின்றோம். அவை எந்தப் பாகுபாடுமின்றி பிரைமரி மற்றும் செகண்டரி நிலைகளில் கல்வியை வழங்குகின்றன. எங்களுடைய வகுப்பறைகளில் அந்த மாணவர்கள் யூதர்களோ கிறிஸ்தவர்களோ இறைமறுப்பாளர்–களோ வேறு எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களோ என்ற எந்தப் பாகுபாடும் கிடையாது. எல்லாப் பிள்கைளும் எங்களுக்கு மதிப்பிட முடியாத முத்துக்கள் ஆவார்கள். விலை மதிப்பற்ற முத்துக்கள் ஆவார்கள்.

ஆக, அல்லாஹ்வின் அருளினால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்ச்சியாக மனித குலத்திற்கு தொண்டு செய்வதில் மூழ்கியிருக்கின்றது. இதில் பிரிட்டனில் இருக்கக்கூடிய Charity மற்றும் பிற Community Project இருக்கின்றன. எனது உள்ளத்து




ஆசை என்னவென்றால் உலகத்தில் கஷ்டங்கள் மற்றும் இன்னல்களை முழுமையாக அகற்றி விட வேண்டும். மக்களுக்கு கண்ணியத்துடன் அவர்கள் வாழ்வதற்கான வாய்ப்பளிக்க வேண்டும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீங்களே பார்ப்பீர்கள். இந்தப் பள்ளிவாசல் உண்மையான ஒளிக்கான ஒரு மினாரவாக இருக்கும்; எட்ட வைக்கக்கூடியதாக இருக்கும். இந்தப் பள்ளிவாசல் இறைவணக்கம் செய்பவர்களுக்கு மட்டும் பிரகாசமானதாக இல்லாமல் அதற்கும் மேலாக ஒவ்வொரு மதம் மற்றும் ஒவ்வொரு நபருக்கும் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான தூதுச் செய்தியை வழங்கக்கூடியதாக இருக்கும். மேலும் அல்லாஹ்வை வணங்குதல் மற்றும் ஒருவர் மற்றவருக்கான உரிமையைச் செலுத்துவது ஆகியவை இந்தப் பள்ளிவாசலிருந்து பிரிக்க முடியாததாகும்.

இறுதியில் ஜமாஅத்தின் அனைத்து மக்களுக்கும் நினைவூட்ட விரும்புகிறேன். அவர்கள் இந்த உயர்ந்த இஸ்லாமிய போதனைகளை அமல் செய்வதற்காக முழுமையான முயற்சி செய்ய வேண்டும். நான் ஏற்கனவே கூறியிருந்தேன். இந்தப் பள்ளிவாசலில் இறைவணக்கம் செய்வது அல்லாஹ்வுக்கு முன்னால் துஆ செய்வது அவர்களது பொறுப்புதான். அத்துடன் சேர்த்து அவர்களது கடமையுடன் சேர்த்து மனிதகுலத்தின் வெற்றிக்காக தியாகம் செய்வதற்கும் தயாராக இருக்க வேண்டும். உலகில் அமைதியை நிலைநாட்ட எவ்வாறு நமது செயல்ரீதியான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று பார்க்க வேண்டும். மற்றவர்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும். ஓர் அழகான சமூகம் குழப்பம் மற்றும் பிரிவினையை விட்டு தூய்மையாக இருக்க வேண்டும். அது எப்பொழுது உருவாக முடியும் என்றால் மக்கள் அன்பு, கண்ணியம் ஆகிய உணர்வுடன் செயல்பட வேண்டும். இந்தப் பள்ளிவாசல் திறக்கப்பட்டுள்ளது. இதில் எவர் நுழைவாரோ அவர் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை நிறைவேற்றுபவராக மட்டுல்லாமல் மனிதகுலத்தின் உரிமையை நிறைவேற்றுபவர்களாகவும் இருப்பார்களாக.

நான் உங்கள் அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அமைதி மற்றும் சமாதானத்தை வழங்குவானாக. ஆமீன். உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:**

**சந்தேகமின்றி, திருக்குர்ஆனின் போதனைகள் உலகளாவிய அந்தஸ்தைக் கொண்டிருக்கின்றன என்று நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். எனவே ஒருவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் சரி அவர் இந்த போதனைகளின்படி அமல் செய்தார் என்றால், உலகம் மிகவும் அமைதி வாய்ந்ததாக ஆக முடியும். இந்த நோக்கம்தான் முழு மக்களுக்கும் நடுவில் அமைதி மற்றும் நன்மையை நிலைநாட்டக்கூடியதாக இருக்கின்றது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்ச்சியாக இதனை செய்து கொண்டிருக்கின்றது. நாம் முழு மக்களுக்கும் அவர்களுடைய மார்க்கம், மதம் என்னவாக இருக்கட்டும். இந்த முயற்சியில் இறங்குவதற்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். உலகில் அமைதி, சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றை வளர்ப்பதற்கு நாம் ஒன்றுசேர வேண்டும். இதுதானே திருக்குர்ஆனின் போதனையாகும்.**

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



3

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

ஜிஹாதுக்கான நிபந்தனைகள் பொருத்தமாக இல்லா விட்டாலும், அடியார்களுடைய இறைநூல் அதற்குக் கட்டளை இடாவிட்டாலும் அவர்கள் எல்லா நேரமும் ஜிஹாதுக்கான சந்தர்ப்பங்களைத் தேடுவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தக் காலம் மார்க்கத்தைப் பரப்பு -வதற்காக கழுத்துகளை வெட்டுவதற்கானது அல்ல என்பது முற்றிலும் வெளிப்படையானதாகும். كِتَابٍ مُّبِيْنٍ (கிதாபே முபீன் எனும்) தெளிவான வேதத்தில் ஒவ்வொரு காலத்திற்கும் ஒரு தனி கட்டளை இருக்கிறது. இன்னும் கூறுவதென்றால், இந்த காலத்தில் அல்லாஹ்வின் ஞானத்தின் எதிர்பார்ப்பு என்னவெனில், உண்மையான மார்க்கத்திற்கு சான்றுகளின் மூலமாகவும், அடையாளங் -களின் மூலமாகவும் ஆதரவு தருவதாகும். மேலும் மார்க்கத்தின் விஷயங்கள் அறிவுப்பூர்வமான கண்களால் கண்டறியப்பட வேண்டும். மேலும் கிளை விஷயங்களும், அடிப்படையான விஷயங்களும் ஆழமான பார்வையுடன் பார்க்கப்பட வேண்டும்.

அதற்குப் பிறகு இல்ஹாமின் (இறைவெளிப்பாட்டின்) ஒளி எதன் பக்கம் வழிகாட்டுகிறதோ, எதை அறிவு முழுமையான முறையில் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு இடமளிக்கிறதோ அத்தகைய வழிமுறையை மேற்கொள்ள வேண்டும். எதிரிகள் ஆயத்தம் செய்திருப்பது போன்று நாம் ஆயத்தம் செய்ய வேண்டும். வாளை மழுங்கச் செய்யவும், அறிவையும், மதியையும் கூர்மையாக்கவும் வேண்டும். உண்மையை ஆய்வு செய்வது, நுட்பத்தை ஆய்வு செய்வது ஆகியவற்றின் வழியைப் பேண வேண்டும். மேலும் அருமையான பானத்தின் நிரம்பி வழியும் இனிப்பான பானத்தை அருந்த வேண்டும். ஏனெனில் நமது எதிரிகள் மார்க்கத்திற்காக வாளை உருவவுமில்லை; வாளினாலும், ஈட்டியினாலும் தமது கொள்கைகளைப் பரப்புவதுமில்லை. மாறாக, பலவிதமான, பலவகையான நுட்பத்திலும் நுட்பமான சூழ்ச்சியையும், ஏமாற்றுதலையும் பயன்படுத்துகின்றனர். மேலும் ஒரு வேட்டைக்காரனைப் போன்று பல்வேறு வேடங்களில் வருகின்றனர். பொய் என்ற தடியை சான்றால் முறிக்க வேண்டும்; ஈட்டிகளால் அல்ல என்பதையே நம் அல்லாஹ் இக்காலத்தில் விரும்பினான். எனவே (அல்லாஹ் ஆகிய) அவன் என்னை அடையாளங்களுடன் அனுப்பி இருக்கிறான்; வாள்களுடன் அல்ல. மேலும் அவன் எனது எழுதுகோலையும், சொல்லையும் இறைஞானங்களின், நுட்பமான கருத்துகளின் ஊற்றாக ஆக்கி இருக்கிறான். அவன் எனக்கு வாளையோ, ஈட்டியையோ கொடுக்கவில்லை. மாறாக, அவன் எனது கையில் பல்வேறுபட்ட சொற்களை ஒன்று சேர்ப்பதற்காகவும், சிதறிய விஷயங்களை என் மூலமாக ஒரு சரடில் கோர்ப்பதற்காகவும், நடுங்கிய உள்ளங் -களுக்கு நிம்மதியை வழங்குவதற்காகவும், பொய்யைப் பரப்புபவர்களின் நாவுகளை மவுனமாக்குவதற்காகவும், இருண்ட உள்ளங்களை ஒளியூட்டுவதற்காகவும், பழைய சான்றுகளை அவற்றில் எந்த விவகாரமும் கோணலாகவோ, எந்த வழியும் கோணலாகவோ இல்லாத அளவுக்கு புத்துயிரூட்டுவதற்காகவும், அவற்றின் இடத்தில் சான்றுகள் மற்றும் நன்றாக எடுத்துக் கூறும் திறமையை வழங்கினான்.

சுருக்கமாக, எடுத்துக் கூறும் திறமையும், இறைஞானங் -களும் எனது மு.ஃஜிஸாவை (அற்புதத்தை) சேர்ந்தவை ஆகும். எனது வாள்கள் என்பது எனது அடையாளங்களும் சொற்களும் ஆகும். இவ்வாறு அல்லாஹ் ஒருவேளை எனது சில எதிரிகளின் உள்ளத்தை திறக்கலாம் அல்லது இறைஞானத்தின் ஒளியிலிருந்து பங்கை வழங்கி விடலாம் என்பதற்காக நான் அவர்களுக்கு இந்த மு.ஃஜிஸாவை (அற்புதத்தை)க் காட்டுவதற்காக அழைப்பு விடுத்தேன்.

எனவே நீங்கள் எனது மு.ஃஜிஸாவை (அற்புதத்தை) மறுக்கின்றீர்கள் என்றால், சண்டையிடுபவர்களைப் போன்று என் மீது தாக்குதல் நடத்துகின்றீர்கள் என்றால், உங்களுக்கு திருக்குர்ஆனின் ஞானமும், (கருத்துச் செறிவுள்ள கூற்றுகளைப் பேசிய) 'சஹ்பான் வாயில்' என்பவரைப் போன்ற கருத்துச் செறிவுக்கான ஞானமும் வழங்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்றால், வாருங்கள். நாம் நமது உதவியாளர்களை அழைப்போம். மேலும் நீங்கள் உங்கள் உதவியாளர்களை அழையுங்கள். நாங்கள் எங்கள் ஆலிம்களையும், நீங்கள் உங்கள் ஆலிம்களையும் அழையுங்கள். பிறகு நாம் எதிரும் புதிருமாக அமர்வோம். மேலும் ஏதாவது ஒரு சூராவுக்கான த.ஃப்ஸீரை (விளக்கவுரையை) உதவியைப் பெறாமல் உடனுக்குடன் தனித் தனியாக எழுதுவோம் என்று நாம் அவர்களிடம் கூறினோம். ஆனால் இவர்களில் எவருக்கும் முன்வைக்கப்பட்ட நிபந்தனையை ஒப்புக் கொள்ளவோ, எழுதப்பட்ட அந்த விஷயத்தைப் பின்பற்றி எனக்குப் போட்டியாக அமர்ந்து நான் எழுதியதைப் போன்ற ஒரு த.ஃப்ஸீரை எழுதவோ தைரியம்

வரவில்லை. மாறாக, அவர்கள் ஒளியை அணைப்பதற்காக -வும், இறைவனால் நியமிக்கப்பட்டவரை பொய்ப்படுத்துவதற் -காகவும் வெட்கத்திற்குரிய வழியை மேற்கொள்ளத் தொடங்கி விட்டனர்.

அவர்களில் மஹர் அலி என்ற பெயரைக் கொண்ட ஒருவர் இருந்தார். அவரை அவர்களின் நண்பர்கள் முழுமையான சான்றோர் என்றும், மிகப் பெரிய வலியுல்லாஹ் (இறைநேசர்) என்றும் கருதி வந்தனர். அவர் திருக்குர்ஆனைப் பற்றிய ஞானம் கொண்டிருக்கிறார்; இறைஞானம் பெற்றவர்களைச் சேர்ந்தவர் ஆவார் என்ற அவருடைய வாதத்திற்குப் பிறகு, அவரை நான் த.ஃப்ஸீர் (விளக்கவுரை) எழுதும் போட்டிக்கு அழைத்தபோது, அவர் எனது த.ஃப்ஸீருக்கு (விளக்கவுரைக்கு)ப் போட்டியாக த.ஃப்ஸீர் (விளக்கவுரை) எழுதுவதற்கு தெளிவாக மறுத்து விட்டார். அவர் கோழையே ஆவார். அவர் ஹம்தானீ அல்லது ஹரீரீ போன்ற(எழுத்தாற்றல் கொண்ட)வராக இருந்தாலும், நான் எழுதுவதைப் போன்றதை அவர் எழுதுவது அவருடைய ஆற்றலுக்குட்பட்டதல்ல. மேலும் அத்துடன் அவர் மக்களுக்கு பயந்து கொண்டும் இருந்தார். அவர் த.ஃப்ஸீர் எழுதுவதில் இருந்து பின்வாங்கினார் என்றால், அந்நிலையில் அவருக்கு வெற்றியும் கிடைக்காது; தனது போட்டியாளருடன் போரிடவும் இயலாது என்பதை நன்கு அறிந்திருந்தார்.

எனவே சுட்டிக்காட்டப்பட்டிருப்பது போன்று, அவர் சதித்திட்டம் தீட்டினார். மேலும் (மஹர் அலி ஆகிய) நான் மிக விரைவில் த.ஃப்ஸீர் எழுதுவேன். ஆனால் ஒரு நிபந்தனை என்னவெனில், நீர் ஹதீஸ்களின் சான்றுகள் மற்றும் திருக்குர்ஆனின் ஒளியில் என்னுடன் விவாதம் செய்ய வேண்டும். மேலும் உமக்கு எதிரியாக இருப்பவரும், காலத்தின் ஆலிம்களில் அனைவரையும் விட மிக அதிக வெறுப்பு கொண்டவரும் ஆகிய ஒருவரை★ தீர்ப்பு கூறுபவராக ஆக்க வேண்டும்.

பிறகு அந்த நீதிபதி நம் இருவரின் கூற்றைக் கேட்ட பிறகு என்னை உண்மைப்படுத்தினார்; உம்மை பொய்ப்படுத் -தினார் என்றால், அந்நிலையில் நீர் உண்மையான உள்ளத்துடன் என்னிடம் பைஅத் செய்து விடுவது உம் மீது கட்டாயமாகும். இதற்குப் பிறகு நாம் இருவரும் த.ஃப்ஸீரை எழுதுவோம். மேலும் எந்தச் சாக்குப்போக்கையும் கூற மாட்டோம். வேறு எந்தப் பேச்சையும் பேச மாட்டோம். நாம் கொஞ்சம் அதிகப்படியான விஷயத்துடன் உமது நிபந்தனையை ஏற்றுக் கொண்டு விட்டோம்.

இதுதான் அவர் எனக்கு எழுதிய கருத்தாகும். மேலும் அவர் அதை அச்சிட்டு மக்களிடம் வெளியிட்டு விட்டார். மேலும் அவர் (அதாவது இந்த எளியவன்) நிபந்தனையை ஒப்புக் கொண்டு விட்டார் என பகிரங்கப்படுத்தி விட்டார். ஆனால் இது பொதுமக்களை தவறான எண்ணத்தில் மூழ்கடிக்க வைப்பதற்காக அவருடைய ஓர் ஏமாற்றும் செயலாக இருந்தது. எனக்கு அவருடைய அச்சடிக்கப்பட்ட கடிதங்களின் தொகுப்பு கிடைத்தபோது, அவர் தானாகவே

★ அந்த ஒருவர் என்பதன் கருத்து, பட்டாலாவைச் சேர்ந்த முஹம்மது ஹுஸைன் ஆவார் - நூலாசிரியர்.

**எனது இந்த த.ஃப்ஸீரின் (விளக்கவுரையின்) குறிக்கோள், இருளையும் ஒளியையும் வித்தியாசப்படுத்திக் காட்டுவதும், காடுகளில் உள்ள இறந்தவர்களுக்கு எதிராக கஸ்தூரியின் நறுமணத்தைப் பரப்புவதும் ஆகும். மேலும் இந்த ஏமாற்றுக்காரரின் ஏமாற்றுவேலையை வெளிப்படுத்துவது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் அனுதாபம் காட்டுவது, குருடர்களுக்கும், பேராசையையும் மன விருப்பத்தையும் பின்பற்றுபவர்களுக்கும் பரிவு காட்டுவதும் த.ஃப்ஸீரின் (விளக்கவுரையின்) குறிக்கோள் ஆகும். அத்தகைய முக்கியமான வேலையைச் செய்வது எப்படிப்பட்ட உண்மையான கடமையாகவும், கட்டாயமான கடனாகவும் இருக்கிறது என்றால், நாம் அதை நிறைவேற்றாமல் விட்டுவிட முடியாது.**

(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம்)

உருவாக்கிய தந்திரத்தைப் பற்றித் தெரிய வந்தபோது, நான் அதற்கு இன்னா லில்லாஹ்.... என்று கூறினேன். மேலும் அவரால் வெளியிடப்பட்ட அவரது எழுத்தின் மீது சாபமிட்டேன். மேலும் கால விரையத்தைப் பற்றி வருத்தத்தை வெளிப்படுத்தினேன்.

பிறகு அந்த நபர் இன்னொரு தந்திரத்தை மேற்கொண்டார். தான் தங்கியிருந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்று, பயணத்தை மேற்கொண்டவாறு, லாஹூர் சென்றடைந்தார். மேலும் அவர் காளை மாட்டைப் போன்று தூசியைக் கிளப்பினார். (அதாவது அவர் புரளியைக் கிளப்பினார்). மேலும் அவர் உடனே த.ஃப்ஸீர் எழுதுவதற்காக மட்டுமே இங்கு (லாஹூர்) வந்திருக்கிறார் என்று மக்கள் பொய்யான பரப்புரை செய்யத் தொடங்கினர். எனவே மக்கள் இந்தப் புழுவை மலைப்பாம்பாகவும், முள்ளை தோட்டமாகவும் கருதிக் கொண்டிருக்கின்றனர் என்று நான் கண்டபோது, நாமும் லாஹூர் சென்று விட்டால், அதில் என்னதான் குற்றம்? ஒருவேளை அல்லாஹ் நமக்கிடையில் ஏதாவது தீர்ப்பு வழங்கி விடலாமே! மேலும் மக்கள் நமது மற்றும் அவரது வாயிலிருந்து வெளி வந்த விஷயங்களை செவிமடுத்து விடலாமே!! என்று நான் எனது உள்ளத்தில் கூறியபோது, இது பற்றி நான் எனது நண்பர்களிடம் ஆலோசனை செய்தேன். மேலும் இந்த இரகசியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தி -னேன். அவர்களின் கருத்துகளைக் கேட்டேன். மேலும் அவர்களுக்கு முன்னால் தொடக்கத்திலிருந்து இறுதி வரையுள்ள எல்லா விபரங்களையும் எடுத்துக் கூறினேன். அப்போது அவர்கள், தாங்கள் லாஹூர் செல்வது நம்மைப் பொருத்தவரை பொருத்தமானதல்ல. அந்த நகரமோ குழப்பங்கள், அநீதி, மற்றும் அக்கிரமங்களின் கோட்டை ஆகும் என்று கூறினர்.

அவர் நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளவில்லை; அவர் தனது பலவீனம், ஆற்றலின்மை, இயலாமை ஆகியவற்றை வெளிப்படுத்தி விட்டார். அவரே தனது இரத்தத்தில் தோய்ந்தவராக இருக்கிறார். அவர் வெருண்டோடுவதிலேயே தனது இரட்சிப்பிற்கான வழியைக் கண்டிருக்கிறார். அவர் அநீதியிழைத்தார்; அருளுக்கு மதிப்பளிக்கவில்லை என்பது

தெளிவாகி விட்டது. அவர் தனது ந.்.ப்ஸ் எனும் செம்மறி ஆட்டை அறுக்கவும் இல்லை. அதன் கால்களைக் கட்டி தொங்க விடவும் இல்லை. தோலை உரிக்கவும் இல்லை. அவர் (லாஹூர் ஆகிய) அங்கு நல்ல நிய்யத்தில் வரவில்லை. அவரிடம் உண்மையான உள்ளத்தின் சாயல் கூட இல்லை என்று நாம் கேள்விப்பட்டோம் எனவும், இது எங்களின் (அதாவது நான் ஆலோசனை பெற்ற அந்தத் தோழர்களின்) ஆலோசனையாகும். மேலும் தீர்மானிப்பது தங்களின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். மேலும் உண்மை என்பது அல்லாஹ் தங்களுக்குக் காட்டுவதும், தங்களின் கண்கள் பார்ப்பது மட்டும்தான் என்று (எனது நண்பர்களாகிய) அவர்கள் கூறினர்.

இவ்வாறு எனது ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியவாறு என்னைத் தடுத்தனர்; தடை செய்தனர். (என்னைத்) தடுத்துக் கொண்டிருந்தனர். எதுவரை என்றால், நான் எனது எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். எனக்கு அவர்களின் ஆலோசனை பிடித்தபோது, நான் அதை ஒப்புக் கொண்டேன் மறுக்கவில்லை. மேலும் எனது எண்ணத்திலிருந்து முகம் திருப்பி விட்டேன். அப்போது எனது எதிரிகள் அதைப் பற்றி பிதற்றத் தொடங்கி விட்டனர். போட்டிக்கு களத்தில் வராமல் சென்று விட்டார் என்று கூறத் தொடங்கி விட்டனர். மேலும் (பீர் மஹர் அலியைச் சேர்ந்தவர்கள்) அறிவு மற்றும் ஞானத்தின் இறக்கைகள் இல்லாமலேயே (மஹர் அலி ஆகிய) அவரை உயரப் பறக்க வைக்கத் தொடங்கினர். அவர்கள் பொய் கூறி வந்தனர்; வெட்கப்படவில்லை. வாய் வீராப்பு பேசி வந்தனர்; இறையச்சத்தைக் மேற்கொள்ளவில்லை. இட்டுக்கட்டிக் கூறினர்; விலகவில்லை.

(மஹர் அலி ஆகிய) அவரைப் பற்றி அவருக்கு உரிமையில்லாத புகழ்ந்துரைகளையெல்லாம் மிகைப்படுத்திக் கூறத் தொடங்கினர். மேலும் அவர்கள் அவருக்கு உரியனவாக இல்லாதிருந்த அப்படிப்பட்ட விநோதமான ஞானங்களை அவருடன் தொடர்புபடுத்திக் கூறினர். முட்டாள்களின் பழக்கமாக இருப்பதைப் போன்று, அவர்கள் என்னை வசைமாறி பொழிந்தனர். மேலும் தீய, ஏளனமான கோணத்தில் என்னைப் பற்றிக் குறிப்பிட்டு வந்தனர். மேலும் இந்த நபர் நமது பீர் மூலமாக (அதாவது பீர் மஹர் அலி என்பவரால்) கலக்கமடைந்தவராகவும், அச்சமடைந்தவராகவும் இருக்கிறார். மேலும் அவரைப் பார்த்து பீதியடைந்து விவாதக் களத்தில் இறங்கவில்லை. மேலும் இவர் அவரது மகத்தான நிலை கண்டு பயத்தாலும், அச்சம் உருவான காரணத்தாலும் நழுவிக் கொண்டிருக்கிறார் என்று அவர்கள் கூறிக் கொண்டிருந்தனர். அவர் போட்டிக்கு வந்திருந்தால் நமது பீர் (மஹர் அலி) அவர்கள், தனது கருத்தாழம் மிக்க கூற்றுகளினால் அவரை காயப்படுத்தியிருப்பார். மேலும் அவர் தனது கல்லைப் போன்ற பண்பைக் கொண்ட கூற்றால் அவருடைய மண்டையை உடைத்திருப்பார் என்றெல்லாம் அவர்கள் முட்டாள்தனமான பேச்சுகளைப் பேசி வந்தனர். என்னை ஏளனப்படுத்தினர்; என்னை வசை பாடினர்; என்னை ஏசிப் பேசினர்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது ந.்.ப்ஸை அடக்கம் செய்யப்பட்ட மய்யித்தைப் போன்று அல்லது பாழடைந்த வீட்டைப் போன்று கருதுகிறேன். மக்கள் என்னை ஒரு மதிக்கத்தக்கவனாகக் கருதுகின்றனர். ஆனால் நானோ ஒன்றுமற்றவன். நான் எனது இறைவனின் நிழலைப் போன்றவன் ஆவேன். நான் விவாதக் களத்திற்காக வெளியேறுவதற்கும், பகைவர்களுக்கு அறைகூவல் விடுப்பதற்கும் எனக்கு என்ன வலிமை இருக்கிறது! ஆனால் அல்லாஹ் என்னை இந்தப் போருக்காக வெளிக் கொணர்ந்தான். நான் அம்பை எய்தியபோது நான் எய்தவில்லை. மாறாக, அல்லாஹ் எய்தான்.

எனக்கு ஓர் ஆற்றல் மிக்கவனும், வல்லமை மிக்கவனுமாகிய அன்பன் இருக்கின்றான். மேலும் அவனது உதவி எனக்குப் போதுமானது. நான் மரணித்து விட்டபோது (அதாவது என்னை மாய்த்துக் கொண்டபோது) என்னைக் க.்.ப்ன் அணிவித்த பின்னர் எனது அந்த அன்பன் என்னிடம் வெளிப்பட்டான். மேலும் எனது மரணத்திற்குப் பிறகு அவன் எனக்கு வசந்தமான தோட்டத்தைப் போன்ற கூற்றை வழங்கினான். மேலும் கற்களையுடைய நிலத்தில் ஓடுகின்ற தண்ணீரை விட அதிக சுத்தமானதும், மிகவும் தெளிவானதுமான அத்தகைய கருத்தாழம் மிக்க சொல்லாடலை அவன் எனக்கு வழங்கினான். மேலும் உயிரைக் கொல்லும் நாகப்பாம்பைப் போன்று, பொய்யைக் கடிக்கும் அத்தகைய உறுதியான சான்றை அவன் எனக்கு வழங்கினான். மேலும் இவையெல்லாம் எனது இறைவனிடமிருந்துள்ளவையாகும். நான் அவனையே சார்ந்திருக்கிறேன். நான் வெறுங்கையுடையவன் ஆவேன். மேலும் நான் (ஆழிய கருத்துகளைக் கொண்ட) இந்த செல்வங்களை ஒவ்வொரு சிறப்பானவருக்கும், பொதுவானவருக்கும் செலவு செய்ய வேண்டும் என்றும், இஸ்லாத்தின் சுவர்களை அவை கீழே விழுந்து விடுவதற்கு முன் சீரமைக்க வேண்டும் என்றும் எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

மேலும் எவர் எனக்கு எதிராக வெளிவருகின்றாரோ அவர் உண்மையில் அனைத்துலகங்களையும் பரிபாலிக்கின்ற இறைவனுக்கு எதிராக வெளிவருகின்றார். நான் ஏழைகளின் வடிவில் மட்டுமே வந்திருக்கிறேன். நான் எனது வலிமையினால் உயர்ந்த பூமியை கடந்து செல்லவும் முடியாது; எனது ஆற்றலினால் பூமியில் மேடு பள்ளத்தைக் கடந்து செல்லவும் முடியாது. மாறாக, தனது இருப்பை மறைக்கின்ற (இறைவனாகிய) அந்த ஆற்றல் மிக்கவன் என்னுடன் இருக்கின்றான். ஆனால் அவன் தனது சான்றுகளையும், ஆதாரங்களையும் காட்டுகிறான். இதன் காரணமாக எதிரிகள் எனது வழியை விட்டு நழுவிச் சென்று விட்டனர்.

மேலும் எனது கவட்டையினால் (எதிரிகளாகிய அவர்களின்) கழுத்துகளும், இதயங்களும் துண்டு துண்டாக்கப்பட்டு விட்டன. எனக்கு எதிராக போட்டியிட எவருக்கும் ஆற்றல் இல்லை. எனது இந்தக் கை (அளவற்ற அருளாளன் எனும்) ரஹ்மானின் ஆற்றல் மிக்க கையின் கீழ் வேலை செய்து கொண்டிருக்கின்றது. நல்லவர்களின் உயிர்களுக்கு புகலிடமாக இருக்கும் அந்த அருள்கள் என் மீது இறங்கின. எனவே நான் அவர்களின் மூலமாக எனக்காக பாதுகாப்பான கோட்டையையும், புகழையும், போற்றுதலையும் பெற்றிருக்கிறேன்.

எத்தகைய அரிதான கராமத்துகள் (இறை அற்புதங்கள்) எனக்கு வழங்கப்பட்டுள்ளன என்றால், அவற்றில் எனது இந்தக் கூற்றும் மு.ஃஜிஸாத்துகளை (அற்புதங்களை) சேர்ந்தவையாக இருக்கின்றன. திருக்குர்ஆனின் த.ஃப்ஸீரையும், மனதைத் தொடும் அளவிலான கட்டுரையையும் எழுதுவதில் என்னுடன் போட்டியிடும் நோக்கத்திற்காக ஒரு மன்னர் ஆலிம்களின் படையை ஆயத்தம் செய்தால், அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு எதிரிகளின் மீது மேலோங்குதலும், மிகத் தெளிவான வெற்றியும் கிடைக்கும் என்று பெருமை மிக்க இறைவன் மீது எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது.

இந்த நோக்கத்திற்காக நான் பல நூல்களையும், ஏராளமான அருமையான மார்க்கத்தின் எழுத்தாற்றல் மிக்க படைப்புகளையும் வெளியிட்டு, உலகின் எல்லா மூலைமுடுக்குகளிலும் பரப்பி விட்டிருக்கிறேன். தன்னைத் தானே இந்தக் களத்தில் குதிரை ஓட்டுவதில் திறமைசாலியாகக் கருதும் ஒவ்வொரு மனிதரையும் நான் போட்டிக்காகத் தூண்டியிருக்கிறேன். இந்த நாட்டின் புகழ் பெற்ற ஆலிம்களை நான் வலிமை மிக்க இறைவனின் கட்டளையால் அழைத்திருக்கின்ற எனது இந்தப் போட்டிக்காக வெளியேறி களமிறங்குவதற்கு அவர்களுக்கு ஆற்றல் இல்லை. பின்னர் கோல்டா ஊரைச் சேர்ந்த அற்பமானவரே! நீர் என்ன? உமது தகுதி என்ன? வழிகெட்டவரே! நீர் துர்நடத்தையுள்ள பண்புகளைக் கொண்ட சில மக்களுடனும், ஒழுக்கங்கெட்ட மக்களுடனும் சேர்ந்து என் மீது தாக்குதல் செய்ய நாடுகின்றீரா?

கவனமற்றவரே! நீர் பூமியில் உள்ளவர்களுக்கு படிப்பினைக்கான முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காக வானம் உம்மை என் முன்னால் கொண்டு நிறுத்தி இருக்கிறது என்பதை நீர் நன்றாக அறிந்து கொள்வீராக. என் இறைவன் தனது ஒப்புக்கொள்ளப்பட்ட அடியார்களின் மதிப்பையும், கவுரவத்தையும் மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காகத்தான் இறைநியதி உம்மை சுற்றி வளைத்து ஒன்று சேர்த்து என்னிடம் கொண்டு வந்திருக்கிறது. மேலும் நாம் ஏதாவதொரு சமுதாயத்தின் முற்றத்தில் இறங்கும்போது அச்சமூட்டி எச்சரிக்கப்பட்ட சமுதாயத்தின் காலை நேரம் மிகவும் தீயதாக இருக்கிறது.

இயலாதவரே! உண்மையைத் தவிர வேறெதனையும் கூறாதீர். உண்மையைத் தவிர வேறு எந்த சாட்சியையும் கூறாதீர். அல்லாஹ்வுக்கு அஞ்சுவீராக. தெரிந்து கொண்டே துணிச்சலைக் காட்டாதீர். நீர் இலக்கண இன்பங்களையும், எடுத்துரைக்கும் ஞானத்தின் நுட்பங்களையும் கருத்தில் கொண்டு திருக்குர்ஆனின் த.ஃப்ஸீர் எழுதும் ஆற்றலை நீர் பெற்றிருக்கின்றீரா என்ன? சுப்ஹானல்லாஹ்! இது ஒரு அப்பட்டமான பொய்யாகும். நீர் உமது அறிவை சென்றடைய வைப்பவரை நன்கு அறிகின்றீர். மேலும் உமது நண்பர்களுடைய, முரீதுகளுடைய அறிவையும் அறிந்தவராக இருக்கின்றீர். அப்படி இருந்தும் சதித்திட்டம் தீட்டுபவர்களைப் போன்று சிறப்பும், மேன்மையும் இருப்பதாக நீர் வாதம் செய்து கொண்டிருக்கின்றீர். நீர் இந்தக் களத்திற்கான குதிரை ஓட்டும் வீரர் அல்லர் என்பதை ஆலிம்கள் அறிகின்றனர். ஆனால் உட்புறமான நோய் மறைக்கப்படுகின்றதைப் போன்றும், அவற்றை மறைத்து வைக்க முயற்சி செய்யப்படுவதைப் போன்றும் அவர்கள் உமது குறையை மறைக்கின்றனர்.

சுருக்கமாக, நீர் இந்த அந்தஸ்துக்கும், தகுதிக்கும் உரியவர் அல்லர். அல்லாஹ் தனது வாரி வழங்கும் பண்பினால் தன்னிடமிருந்து உமக்கு அறிவையும், இலக்கியத்தையும் கற்றுக் கொடுக்கவுமில்லை; நீர் முயற்சி செய்து அதைப் பெற்றிருக்கவுமில்லை. அப்படி இருந்தும் நீர் லாஹுர் வந்தபோது தயக்கமின்றி த.ஃப்ஸீர் எழுதுவதாக வாதம் செய்யத் தொடங்கி விட்டீர். நீர் உமது எல்லைகளை மீறியதன் காரணமாக நீர் தெரிந்து கொண்டே குருடராகி விட்டீர். அல்லது உமது அட்டூழியத்தின் காரணமாக உண்மையில் பார்க்கவே இயலாது போயிற்று. நீர் செய்ய வேண்டியதிருந்ததை செய்தீர். மேலும் உமது அகங்காரத்தின் மூலமாக அட்டூழியத்தினாலும், உமது தவறான கூற்றுகளினாலும் மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தீர். மேலும் உமது பலவிதமான பொய்யான விஷயங்களின் சாயத்தைக் கொண்டு அவர்களுக்கு சாயம் பூசிவிட்டீர். உமது முட்டாள்தனமான விஷயங்களால் சமுதாயத்தை வேரறுக்கும் அளவுக்கு நீர் ஏமாற்றத்திற்கு மேல் ஏமாற்றம் செய்தீர்.

உமது (சதித்திட்டம் எனும்) பாம்புகள் மக்களை நாசமாக்கி விட்டன. அது மட்டுமின்றி, நீர் கடுமையான சொற்களை பேசுவதிலிருந்தும், குறைகூறுவதிலும் ஓர் அணுவளவிலான குறையையும் விட்டுவைக்கவில்லை. தீய பேச்சைப் பேசுவது, கெட்ட வார்த்தையைக் கூறுவது, கேலி கிண்டல் செய்வது ஆகியவற்றின் உச்சத்தில் நீர் தனித்துவம்

எனக்கு ஓர் ஆற்றல் மிக்கவனும், வல்லமை மிக்கவனுமாகிய அன்பன் இருக்கின்றான். மேலும் அவனது உதவி எனக்குப் போதுமானது. நான் மரணித்து விட்டபோது (அதாவது என்னை மாய்த்துக் கொண்டபோது) என்னைக் க.ஃப்ன் அணிவித்த பின்னர் எனது அந்த அன்பன் என்னிடம் வெளிப்பட்டான். மேலும் எனது மரணத்திற்குப் பிறகு அவன் எனக்கு வசந்தமான தோட்டத்தைப் போன்ற கூற்றை வழங்கினான். மேலும் கற்களையுடைய நிலத்தில் ஓடுகின்ற தண்ணீரை விட அதிக சுத்தமானதும், மிகவும் தெளிவானதுமான அத்தகைய கருத்தாழம் மிக்க சொல்லாடலை அவன் எனக்கு வழங்கினான். மேலும் உயிரைக் கொல்லும் நாகப்பாம்பைப் போன்று, பொய்யைக் கடிக்கும் அத்தகைய உறுதியான சான்றை அவன் எனக்கு வழங்கினான். மேலும் இவையெல்லாம் எனது இறைவனிடமிருந்துள்ளவையாகும்.

(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம்)

பெற்றவராக இருக்கின்றீர். செல்வம் மற்றும் மிரட்டல் ஆகியவற்றின் அழுத்தத்தால் நீர் அவர்களின் பார்வையில் மார்க்கத்திற்கு உதவி செய்பவரைச் சேரந்தவராகவும், மார்க்கத்திற்கு அனுதாபம் காட்டுபவர்களைச் சேர்ந்தவராக -வும், இந்த துக்கத்திற்கு சிகிச்சை செய்பவரைச் சேர்ந்தவராகவும் கணக்கிடப்பட வேண்டும் என்பதற்காக பொதுமக்களின் புகழ்ந்துரைகளைப் பெற வேண்டும் என்ற பேராசையில் லாஹூர் செல்ல எண்ணம் கொண்டீர்.

மேலும் இந்த நடவடிக்கைகளினால் நீர் நாவுகளின் பழித்துரைத்தலிலிருந்து பாதுகாப்பில் வந்து விடலாம் என்பதற்காகவும், உம் மீது தீய முடிவும், தண்டனையும் நியமிக்கப்படக் கூடாது என்பதற்காகவும் நீர் திக்குவாயின் குறையிலிருந்து தூயவராக இருப்பதாகவும், பேச்சாற்றல் கொண்டவர்களுக்கிடையில் நீர் ஆண்மையற்றவர் அல்லர் என்று கால்நடையைப் போன்றமக்கள் கருதிக் கொள்வதற் -காகவும் நீர் அவ்வாறு செய்தீர். உமக்கு பலவகையான அறிவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், பலவிதமான அறிவின் அருட்கொடைகள் உமக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும், இறைஞானத்தின் எல்லை வரை சென்றடைகின்ற அப்படிப்பட்ட அகப்பார்வை உமக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், எடுத்துரைக்கும் வட்டத்தை முழுமை செய்யும் அப்படிப்பட்ட சரியான கருத்து உமக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், ஒவ்வொரு கோணலையும், வரம்பு மீறுதலையும் தடுப்பதாக இருக்கின்ற அத்தகைய புரிதல் உமக்கு அருளப்பட்டிருக்கிறது என்றும், சான்று எனும் பறவைகளை பருந்தைப் போன்று வேட்டையாடுகின்ற அப்படிப்பட்ட அறிவு வழங்கப்பட்டிருக்கிறது என்றும், உறுதியான, ஒளிமிக்க சான்றுகளால் ஆதரவளிக்கப்பட்ட அத்தகைய பேச்சாற்றல் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், பலவிதமான ஞானங்களாலும், அகத்தின் அழகாலும் அலங்கரிக்கப்பட்ட அத்தகைய ந.்.ப்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், நேர்வழியின் பக்கம், நல்வழியின் பக்கம் கொண்டு செல்லும் அத்தகைய நல்வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்றும், அடியார்களின் இறைவனைத் தவிர உள்ளவற்றிலிருந்து தன்னிறைவு பெற்றவனாக ஆக்கி விடுகின்ற அப்படிப்பட்ட இல்ஹாம் வழங்கப்பட்டுள்ளது என்றும் மக்கள் கருத வேண்டும் என்பதற்காக நீர் அவ்வாறு செய்தீர்.

மேலும் தன்னைத் தானே புகழ்வதில், தன்னிடமிருந்து ஏற்பட்டிருந்த குறையை உமக்கு ஆதரவாக உமது நண்பர்கள் முழுமையாக்கி விட்டனர். மேலும் உம்மைப் புகழ்ந்து பாட்டுகள் பாடப்பட்டன. மேலும் உம்மைப் புகழ்வதில், மிகைப்படுத்திக் கூறுவதில் எந்தக் குறையும் விட்டு வைக்கப்படவில்லை. பின்னர் அவர்கள் உமக்கு உயர்வையும், மேன்மையையும் வழங்குவதுடன் என்னை வசைபாடினர் என்னை ஏளனப்படுத்தினர். அவர்கள் யாரை சந்தித்தாலும் அல்லது அவர்கள் எவருக்கு முன்னால் சென்றாலும் அவர்களிடம் என்னைப் பற்றி தரக்குறைவாகப் பேசுகின்றனர். அவர்கள் புறம்பேசி என்னுடைய மாமிசத்தை உண்டனர். மேலும் உண்மையில் அவர்கள் அவ்வாறு செய்து, நாசமாக்கும் விஷத்தை அவர்களே உண்டனர்.

ஏளனப்படுத்தும் அவர்களின் செயல் தனது உச்ச நிலையை அடைந்துவிட்டபோது, அவர்களின் பேச்சுகள் எனும் கத்திகள் என்னைக் காயப்படுத்தியபோது, விவகாரம் தனது எல்லையை அடைந்து விட்டபோது, அவர்கள் எல்லா வகையான அநீதிகளையும் செய்திருக்கின்றனர். காளை மாட்டைப் போன்று புழுதியைக் கிளப்பியிருக்கின்றனர். (அதாவது புரளியைக் கிளப்பியிருக்கின்றனர்). நீதியின் வழியை விட்டு விட்டனர். அநியாயத்தின் போக்கை மேற்கொண்டனர். முட்டாள்தனமான பேச்சும், வீணான பேச்சும் அதிகமாகி விட்டது. இந்த வசைபாடுவதினாலேயே உள்ளமும், காதும் நிரம்பி விட்டன. எண்ணங்கள் வீணாக சுற்றித் திரியக் கூடியவையாக மாறி விட்டன. ஞானங்கள் பொய்ப்படுத்தப்பட்டன. முட்டாள்தனமான விஷயங்கள் உண்மைப்படுத்தப்பட்டன என்பதையெல்லாம் நான் கண்டபோது, பொதுமக்களை இந்த மக்களின் தவறான கூற்றுகளிலிருந்து நான் காப்பாற்ற வேண்டும் எனவும், அவர்களின் வீணான பேச்சின் விளைவாக மூட்டப்பட்ட நெருப்பை, தீர்ப்பளிக்கும் கூற்றின் மூலமாக தணிக்க வேண்டும் எனவும், நான் த.்.ப்ஸீர் (விளக்கவுரை) எழுத வேண்டும் எனவும், அந்த மக்கள்தான் பொய்யர்கள் என ஒவ்வொரு சிறியவருக்கும், பெரியவருக்கும் காட்ட வேண்டும் எனவும் எனது உள்ளத்தில் இடப்பட்டது.

இந்தப் பெரும் சூழ்ச்சிக்காரர்களின் பொய்யின் கதவைத் திறப்பதற்கான நோக்கம்தான் என்னை (த.்.ப்ஸீர் எழுதும்) இதற்கு ஆயத்தப்படுத்தி இருக்கிறது. ஏனெனில் அவர் மிகப் பெரிய ஏமாற்றம் செய்திருக்கிறார். அவர் தன்னை மிகப் பெரிய ஆலிம்களைச் சேர்ந்தவராக வெளிப்படுத்தி இருக்கிறார். மேலும் அவர் திருக்குர்ஆனைப் பற்றிய ஞானம் கொண்டிருப்பவராகவும், அவர் தனக்கு ஒப்பான தரத்தையுடைய ஆலிம்களை விட அவர் மேன்மை கொண்டவராகவும், அவர் மேலோங்குதல் பெறுவதற்கும், அவருக்கு உதவி செய்யப்படுவதற்கும் நேரம் வந்து விட்டது என்றும் அவர் வாதம் செய்தார்.

எனது இந்த த.்.ப்ஸீரின் (விளக்கவுரையின்) குறிக்கோள், இருளையும் ஒளியையும் வித்தியாசப்படுத்திக் காட்டுவதும், காடுகளில் உள்ள இறந்தவர்களுக்கு எதிராக கஸ்தூரியின் நறுமணத்தைப் பரப்புவதும் ஆகும். மேலும் இந்த ஏமாற்றுக்காரரின் ஏமாற்று வேலையை வெளிப்படுத்துவது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் அனுதாபம் காட்டுவது, குருடர்களுக்கும், பேராசையையும் மன விருப்பத்தையும் பின்பற்றுபவர்களுக்கும் பரிவு காட்டுவதும் த.்.ப்ஸீரின் (விளக்கவுரையின்) குறிக்கோள் ஆகும். அத்தகைய முக்கியமான வேலையைச் செய்வது எப்படிப்பட்ட உண்மையான கடமையாகவும், கட்டாயமான கடனாகவும் இருக்கிறது என்றால், நாம் அதை நிறைவேற்றாமல் விட்டுவிட முடியாது. நேரம் கிடைக்காமல் இருந்த போதிலும் கூட, (உண்மையையும், பொய்யையும் பிரித்தறிவிக்கும் புகழ்பெற்ற இறைநூல் எனும்) .்.புர்கானே ஹமீதின் த.்.ப்ஸீர் நேர்வழி பெற்றவர்களையும், வழிகெட்டவர்களையும் வித்தியாசப் -படுத்திக் காட்டும் வகையில் இந்த அழைப்பைத் தூண்டியதற்கு அதுவே அசல் காரணமாக இருந்தது.

(தொடரும்...)




بسم الله الرحمٰن الرحيم

سبحانک ما اقوی برهانک العظمة کلهالک والقدرة کلها لک العالم کلهٗ ضعیف والقوة کلهالک انت الاحد الصمد الذی توحد فی وجوب وجوده و تفرد فی فضله وجوده جلت حکمتک و تجلت حجتک و تمت نعمتک وعمت رحمتک و تنزه ذاتک عن کل منقصة و نقصان و تعالٰی شانک من جمیع ما یشان انت المتوحد المتفرد بجلال ذاته و کمال صفاته المنزه عن شوائب النقص و سماته نحمدک علٰی ما تفضلت علینا بتنزیل کتاب لاریب فیه ولا خطاء ولا نسیان و کشفت به علی نفوسنا الخاطئة المخطئة سبیل الحق و العرفان فانت هدیتنا بالفضل والجود والاحسان وما کنا لنهتدی لولا هداک یا رحمٰن.

ونسئلک ان تصلی علی رسولک النبی الامی الذی نجیتنا به من سُبُل الضلالة والطغیان واخرجتنا به من ظلمات العمی والحرمان الذی ظهر دینه الحق علی کل دین من الادیان و تقدست ملته عن کلّ شرک و ظهر دینه الحق علی کل دین من الادیان و تقدست ملته عن کلّ شرک و بدعة و عدوان و سبقت شریعته فی کل معرفة و حکمة و برهان هو العبد المخلص الذی اصطنعته لمجتک و توحیدک وجعلت احب الیه من نفسه ذکر تقدیسک و تمجیدک ارسلته رحمة للعالمین وحجة علی المنکرین و سراجًا منیرًا للسالکین وداعیًا الی اللّٰه للطالبین و بشیرًا و مبشرًا

பொருள்: நீ தூயவன்! உன்னுடைய வாதங்கள் எத்தனை வலுவானவை! அத்தனை மேன்மையும் உனக்கே உரியது! அனைத்து ஆற்றலும் உனக்கே உரியது! முழு உலகமும் பலவீனமானது. அனைத்து ஆற்றலும் உனக்கே உரியது! நீ ஏகன் ஆவாய். நீ எதனையும் சார்ந்திருக்கவில்லை. பிற அனைத்தும் உன்னை சார்ந்திருக்கக் -கின்றன. நீ தனித்தவன். உனது இருப்பிலும் உனது கிருபையிலும் உனது கொடை தன்மையிலும் நீ தனித்தவன். உன் ஞானம் மிகப் பெரியது. உனது வாதங்கள் வெளிப்படையானவை. உனது கொடை நிறைவானது. உனது கருணை அனைத்தையும் சூழ்ந்துள்ளது. எந்த ஒரு பழுது மற்றும் குறைபாட்டை விட்டும் நீ மிகவும் மேலானவன். எந்த ஒரு கண்ணியக் குறைவோ அல்லது கௌரவக்குறைவோ அண்டாத உன்னத நிலையில் நீ இருக்கிறாய்.

உனது இருப்பின் மேன்மையிலும் உனது பண்புகளின் முழுமைத்தன்மையிலும் நீ மட்டுமே தனித்தவனும் நிகரற்றவனும் ஆவாய். பலவீனம் மற்றும் குறைபாட்டின் எந்த ஒரு சுவடும் இல்லாதவன். எந்த ஒரு சந்தேகமோ பிழையோ விடுதல்களோ இல்லாத ஒரு வேதத்தை இறக்கி எங்கள் மீது நீ அருளியுள்ள தயவுக்காக நாங்கள் உன்னை புகழ்கின்றோம். தவறிழைக்ககூடியவர்களாகிய எமக்கு உண்மையின் வழியையும் அறிவையும் ஞானத்தையும் அவ்வேதத்தில் இருந்து வெளிப்படுத்தியுள்ளாய். உனது கிருபை, தயாளம் மற்றும் அருட்கொடையின்படி எம்மை வழிநடத்துகிறாய். உனது வழிகாட்டுதல் இல்லாதிருப்பின், அருளாளனாகிய இறைவனே! நாங்கள் அழிந்திருப்போம். குறைபாடுள்ளவர்களான, பார்வையற்ற, இருளில் மூழ்கியுள்ள நிலையில் இருந்த எங்களை விடுவித்து, தவறான வழிநடத்தல்களில் இருந்து, எங்களை எந்த ஒரு படிப்பறிவுமற்ற உனது தூதரின் மூலம் நீ மீட்டாயோ அத்தூதரின் மீது உன் சலாத்தினை அருளும்படி நாங்கள் வேண்டுகின்றோம்.

அவரே உண்மை மார்க்கத்தைப் பிற மார்க்கங்களில் இருந்தும் மேலோங்கச் செய்தவர். அவரைப் பின்பற்றுகிற -வர்கள், இணைவைத்தல், நூதனமான காரியங்களை சேர்த்தல் மற்றும் மீறுதல்களிலிருந்தும் தூய்மையாக்கப் -படுகின்றனர். தூய்மையான அவரது ஷரீஅத் எல்லா உண்மைகளையும், ஞானம் மற்றும் சான்றுகளையும் உள்ளடக்கி மேலோங்கி உள்ளது. அவரே உனது உண்மையான ஊழியர் உனது அன்பு மற்றும் உனது ஏகத்துவத்தை நிலைநாட்டும்படி அவரை படைத்துள்ளாய்.. உனது தூய்மை மற்றும் உனது மேன்மையைப் பற்றிய சிந்தனையே நீ அவருக்கு தன்னை விட மிக நேசத்திற்குரியதாக ஆக்கி வைத்தாய். முழு உலகிற்கும் அருளாக நீ அவரை அனுப்பி வைத்தாய்.

அவர் ஓர் உயிருள்ள சான்றாகவும், உண்மையைத் தேடுபவர்களுக்கு ஒளிவீசும் விளக்காகவும், இறைவன்பால் அழைக்ககூடிய ஒரு கலங்கரை விளக்காகவும், விசுவாசிகளுக்கு நற்செய்தியை ஏந்தி நிற்பவராகவும், எதிர்கொள்ளும் எல்லாருக்கும் ஒரு நல்ல நிறைவான மனிதராகவும் ஆக்கினாய். ஆன்மிக அருட்கொடைகளை

உணரும் பொருட்டு வழிகாட்டக் கூடியதாகவும் ஞானத்தின் அடிப்படையிலான எல்லா சட்டங்களையும் அவர்கள் கொண்டு வந்த வேதம் உள்ளடக்கியுள்ளது.

அவர்கள் மனித இயல்பின் அசுத்தங்களிலிருந்தும் மனிதர்களை தூய்மையாக்கி இறைவன் நேசிக்கக்கூடிய நற்குணங்களால் அலங்காரப்படுத்தி இவ்விதமாய் பலரையும் அறிவாற்றலிலும் நடைமுறை ஞானத்திலும் முழுமையடையச் செய்தார்கள். மேலும் அவர்களை தனது போதனையால் உண்மையான மற்றும் நிச்சயமான அறிவின் எல்லாப் பிரிவுகளிலும் மேன்மை அடையச் செய்தார்கள். மேலும் ஏக இறைவனின்பால் உள்ள நேசத்தால் அம்மக்கள் பரவசம் அடைந்தார்கள். இறைவனின் தூய முகத்தினையும் அவனது தூய வெளிப்பாடுகளையும் தரிசிப்பதில் அம்மக்கள் ஆர்வம் கொண்டார்கள்.

இறைவா! அன்னாரின் மீதும் அன்னாரின் சகோதரர்களாகிய பிற அனைத்து தூதர்களின் மீதும் உனது அருள்களைப் பொழிவாயாக! மேலும் அன்னாரது தூய்மையான அருளுக்குரிய வாரிசுகள் மீதும் அன்னாரின் நேர்மையான உண்மையான சஹாபாக்களின் மீதும் ஸலவாத்தினை அருள்வாயாக. ஆமீன்.

ہر دم از کاخِ عالم آوازیست     کہ یکش بانی و بنا سازیست

பரந்து விரிந்துள்ள கண்கவர் பிரபஞ்சம் இடைவிடாது பறைசாற்றிக் கொண்டே இருப்பது யாதெனில் அதன் அடித்தளங்களை அமைத்து கட்டி எழுப்பியவன் ஒருவன் இருக்கின்றான்.

نہ کس او را شریک و انبازیست     نے بکارش دخیل و ہمرازیست

அவனுக்கு இணையும் துணையும் இல்லை. அவனது பணியில் குறுக்கிட யாருமில்லை. அவனது இரகசியங்களை யாரும் அறியார்.

ایں جہاں را عمارت اندازیست     واز جہاں برتر است و ممتازیست

அவனே பிரபஞ்சத்தின் படைப்பாளன். அவன் பிரபஞ்சத்தை மிகைத்தவன். ஆனால் அவன் அதைச் சார்ந்தவன் அல்லன்.

وحدہٗ لا شریک حی و قدیر     لم یزل لایزال فرد و بصیر

அவன் தனித்தவன். அவனுக்கு பங்காளி யாரும் இல்லை. உயிருள்ளவன். ஆற்றல் உள்ளவன். அவன் நித்தியமானவன். எக்காலத்திற்கும் நிலைத்திருப்பவன். தனித்துவம் வாய்ந்தவன். அனைத்தையும் பார்ப்பவன்.

کارسازِ جہان و پاک و قدیم     خالق و رازق و کریم و رحیم

அவனே பிரபஞ்சத்தின் படைப்பாளி. தூயவன். நித்தியமானவன். படைப்பவன். வாழ்வாதாரம் வழங்குபவன். அருளானன். கருணையாளன்.

رہنماء و معلم رہِ دین     ہادی و ملہمِ علومِ یقین

அவனே நம்பிக்கையின் பாதையில் வழிகாட்டும் ஆசிரியர் ஆவான். உண்மையான அறிவை வெளிப்படுத்தும் வழிகாட்டி. நேர்த்தியானவன்.

متصف باہمہ صفاتِ کمال     برتر از احتیاجِ آل و عیال

எல்லா உயர்ந்த பண்புகளுக்கும் சொந்தக்காரன். துணை, வாரிசு ஆகிய தேவை இன்றி மிக உயர்ந்தவன்.

بریکے حال ہست درہمہ حال     رہ نیابد بدو فنا و زوال

அவன் என்றும் மாறாதவன். மரணத்திற்கும் வீழ்ச்சிக்கும் அப்பாற்பட்டவன்.

نیست از حکم او بروں چیزے     نہ ز چیزیست او نہ چوں چیزے

அவனது கட்டளைகளுக்கு உட்படாதது என்று எதுவும் இல்லை. எதனின்றும் அவன் உருவானவன் அல்ல. எதைப் போன்றவனும் அல்ல.

نتواں گفت لامس اشیاست     نے تواں گفتن ایں کہ دور از ماست

நம் அருகில் இருக்கின்றான் என்று நாம் கூற இயலாது. நம்மை விட்டு தூரமாக இருக்கின்றான் என்றும் நாம் கூற இயலாது.

ذات او گرچہ ہست بالاتر     نتواں گفت زیر اوست دگر

எல்லாவற்றிற்கும் மேலானவனாக அவன் இருப்பினும், அவனுக்கு கீழே ஏதேனும் இருக்கிறது என்று நாம் கூற இயலாது.

ہرچہ آید بفہم و عقل و قیاس     ذاتِ او برترست زاں وسواس

அறிவினாலோ அறிவாற்றலினாலோ அல்லது கற்பனையினாலோ உருவாக்கக்கூடிய அனைத்தையும் அவன் மிகைத்தவன். அவனது இருப்பு அனைத்து சந்தேகங்களுக்கும் மேலானது.

ذاتِ بے چون و چند افتادست     واز حدود و قیود آزاد ست

அவன் இணையற்றவன். அவன் தனித்துவமானவன். எந்த எல்லைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டவன் அல்ல.

نہ وجودے بذاتِ او انباز     نہ کسے در صفات او انباز

அவனுக்கு யாரும் சமமனவர் இல்லை. அவனது சுயத்திற்கோ பண்புகளுக்கோ யாரும் இணை இல்லை.

ہمہ پیدا ز دست قدرتِ او     کثرت شان گواہ وحدت او

அனைத்தும் அவனது ஆற்றலினால் படைக்கப்பட்டது. படைப்பின் பலவித வேறுபாடுகள் அவனது ஒருமைக்கு சான்றாக இருக்கின்றது.

گر شریکش بُدی ز خلق دگر     گشتی ایں جملہ خلق زیر و زبر

படைப்பில் அவனுக்கு யாரேனும் பங்காளி இருக்கக்கூடின் எல்லாப் படைப்புகளும் மொத்தமாக ஒரு குளறுபடியில் இருந்திருக்கக்கூடும்.

ہرچہ از وصف خاکی و خاک ست     ذاتِ بیچون او ازاں پاک ست

நிகரற்ற அவன் மாசு மற்றும் தூசியிலிருந்து தோன்றிய அனைத்தில் இருந்தும் சுதந்திரம் ஆனவன்.

بند بر پائے ہر وجود نہاد     خود زہر قید و بند ہست آزاد

எல்லாவற்றின் மீதும் கட்டுப்பாடுகள் விதித்துள்ள அவன், தான் எந்தக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவன் அல்லன்.

آدمی بندہ ہست و نفسش بند     در دو صد حرص و آز و سر بکمند

எண்ணற்ற ஆசைகள் மற்றும் பேராசைகளில் பீடிக்கப்பட்டுள்ள மனிதன் விலங்கிடப்பட்ட ஓர் அடிமை.

ہمچنیں بندہ آفتاب و قمر  بند در سیرگاہِ خویش و مقر

சூரியனும் சந்திரனும் கூட தங்களுக்கான பாதைகளில் செல்லும்படி நிர்பந்திக்கப்பட்டுள்ளன,

ماہ را نیست طاقت ایں کار  کہ بتابد بروز چوں احرار

பகலில் ஒளிவீசும்படி செய்யும் ஆற்றல் சந்திரனுக்கு இல்லை.

نیز خورشید را نہ یارائے  کہ نہد بر سریر شب پائے

இரவின் சிம்மாசனத்தில் அமரும் ஆற்றல் சூரியனுக்கும் இல்லை.

آب ہم بندہ ہست زیں کہ مدام  بند در سروے است نے خود کام

குளிர்ச்சி தரக்கூடிய நீரும் கூட தன்னிச்சையாக வேறுவிதமாக செயல்பட முடியாததொரு அடிமைதான்.

آتشے تیز نیز بندۂ او  در چنیں سوزشے فگندۂ او

தகிக்கும் நெருப்பும் அவனது அடிமையே. அவனே நெருப்பை சுட்டெறியக்கூடியதாக அமைத்துள்ளான்.

گر برآری بہ پیش او فریاد  گرمیش کم نہ گردد اے استاد

ஞானமுள்ள மனிதனே! நீ நெருப்பிடம் எத்தனை இரந்தாலும் மன்றாடினாலும் அதன் வெப்பத்தை உன்னால் தணிக்க இயலாது.

پائے اشجار در زمیں بندست  سخت درپا سلاسل افگندست

மரங்களின் தண்டுகள் நிலத்தில் உறுதியாக வேரூன்றப்பட்டுள்ளன. அவைகளின் கால்களுக்கு உறுதியான விலங்குகள் போடப்பட்டுள்ளன.

ایں ہمہ بستگان آں یک ذات  بروجودش دلائل و آیات

இவ்அனைத்து கோட்பாடுகளும் ஏக இறைவனையே சுட்டிக் காட்டுகின்றன. இவைகள் அத்தனையும் இறைவனின் இருப்பிற்கு சான்றாகவும் ஆதாரமாகவும் விளங்குகின்றன.

اے خداوند خلق و عالمیان  خلق و عالم ز قدرتت حیران

எல்லா உலகங்கள் மற்றும் படைப்பினங்களின் இறைவனே! முழு பிரபஞ்சமும் உன் ஆற்றலில் பிரமிப்படைந்துள்ளது.

چہ مہیب ست شان و شوکت تو  چہ عجیب ست کار و صنعت تو

உனது வலிமையும் மேன்மையும் எவ்வளவு அற்புதமானது! உனது செயலும் படைப்பும் எத்தனை விசித்திரமானது!

حمد را باتو نسبت از آغاز  نے دراں کس شریک نے انباز

முதற்கண் உனக்கே அத்தனை புகழும் உரித்தாகுக. இதில் உனக்கு துணையோ இணையோ இல்லை. நிகரற்றவன்.

تو وحیدی و بے نظیر و قدیم  منزہ ز ہر قسیم و سہیم

நீ நித்தியமானவனும் நீ துணை மற்றும் இணையின் தேவையின்றி மிக உயர்ந்தவன்.

کس نظیر تو نیست در دو جہان  بر دو عالم توئی خدائے یگان

ஈருலகிற்கும் நீ மட்டுமே அதிபதி. இதில் ஒன்றிலோ அல்லது மற்றதிலோ உன்னைப் போல் ஒருவர் இல்லை.

زور تو غالب است برہمہ چیز  ہمہ چیزے بہ جنب تو ناچیز

உன் வலிமை அனைத்தையும் ஆள்கிறது. உனக்கு முன் தகுதி வாய்ந்தது என எதுவும் இல்லை.

ترست ایمن کند ز ترس و خطر  ہر کہ عارف ترست ترساں تر

உன் மீதான அச்சம், ஒருவரை மற்ற அனைத்தின் மீதான அச்சதினின்றும் காக்கின்றது. எத்தனை அதிகமாக ஒருவர் உன்னை அறிந்திருப்பாரோ அத்தனை அதிகமாக உன் மீதான வியப்பில் அவர் வாழ்வார்.

خلق جوید پناہ و سایہ کس  واں پناہِ ہمہ تو ہستی وبس

மனிதர்கள் மற்றவர்களிடம் இருந்து பாதுகாப்பு மற்றும் அடைக்கலம் தேடுகின்றனர். ஆனால் நீ ஒருவனே மிகப்பெரிய பாதுகாப்பை வழங்கக்கூடியவன்.

ہست یادت کلید ہر کارے  خاطرے بے تو خاطر آزارے

உன்னை நினைவு கூறுதல் எல்லா சங்கடங்களையும் பிரச்சனைகளையும் தீர்க்கக்கூடிய திறவுகோல் ஆகும். உன்னைத் தவிர நீ அல்லாது மனதில் தோன்றும் பிற எண்ணங்கள் அனைத்தும் இதயத்திற்கு சஞ்சலங்களே.

ہر کہ نالد بدر گہت بہ نیاز  بخت گم کردہ را بیابد باز

யாரெல்லாம் உன்னை தாழ்மையுடன் அழைப்பாரோ அவர், தான் இழந்துவிட்ட நன்மைகளை மீண்டும் கண்டடைவார்.

لطف تو ترکِ طالباں نکند  کس بکارِ رہت زیاں نکند

உனது கிருபை, உன்னைத் தேடுபவர்களை விட்டு ஒருபோதும் விலகுவதில்லை, உனது பாதையில் யாரும் நஷ்டம் அடைவதுமில்லை.

ہر کہ باذات تو سرے دارد  پشت بر روئے دیگرے دارد

யாரேனும் உன்னிடத்தில் சரணடைந்து விட்டால் அவர் தம்மை பிறவற்றிலிருந்து அப்பாலாக்கிக் கொள்கின்றார்.

زینکہ چوں کار بر تو بگذارد  رو بہ اغیار ازچہ رو آرد

உனது ஆற்றல் மிக்க கரங்களில் தனது விஷயங்களை விட்டு விட்ட பின்னர் அவர் ஏன் பிறவற்றின்பால் திரும்ப வேண்டும்?

ذاتِ پاکت بس ست یار یکے  دل یکے جان یکے نگار یکے

ஒரே இதயமும் ஒரே ஆன்மாவும் நமக்கு இருக்கும் போது தூய்மையான நீ ஒருவனே. ஒருவன் மட்டுமே எங்களுக்கு நண்பனாக போதுமானவன்.

ہر کہ پوشیدہ با تو در سازد  رحمتت آشکار بنوازد

எவர் ஒருவர் உன்னிடத்தில் பிறர் அரியாவண்ணம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வாரோ அவர் மீது உன் அருள் பிறர் அனைவரும் காணும்படி வெளிப்படையாக பொழியும்.

ہر کہ گیرد درت بصدق و حضور  از در و بام او ببارد نور

உன்னை பக்தியுடனும் நேர்மையுடனும் பற்றிக் கொள்பவரின் வீடு வெளிச்சம் நிறைந்ததாக இருக்கும்.

ہر کہ راحت* گرفت کارش شد　صد امیدے بروز گارش شد

உனது பாதையில் தன்னை இணைத்துக் கொள்பவர் தனது அத்தனை குறிக்கோள்களையும் எய்துவார். அவரது அத்தனை விஷயங்களிலும் அதிக நம்பிக்கை ஒளிவீசும்.

ہر کہ راہ تو جُست یافتہ است　تافت آن رو کہ سرتافتہ است

உனது பாதையைத் தேடுவோர் அதைக் கண்டடைவர். உன்னை விட்டும் திரும்பாத முகமே ஒளிவீசும்.

وانکہ از ظل قربت تو رمید　بردر ہر کہ رفت ذلت دید

உனது அடைக்கலத்தை விட்டும் யார் ஓடிச் சென்று விடுவாரோ அவர் எங்கு சென்றினும் இழிவடைவார்.

اے خداوندِ من گناہم بخش　سوئے درگاہِ خویش راہم بخش

என் இறைவனே! என் பாவங்களை மன்னிப்பாயாக! உன்னுடைய பிரசன்னத்திற்கு வழிகாட்டுவாயாக!

روشنی بخش در دل و جانم　پاک کُن از گناہِ پنہانم

என் இதயத்திற்கும் ஆன்மாவிற்கும் ஒளியை அருள்வாயாக! மறைவான என் பாவங்களினின்றும் என்னைத் தூய்மைப்படுத்துவாயாக!

دلستانی و دلربائی کن　بہ نگاہے گرہ کشائی کن

என் நேசராய் இருந்து என் உள்ளம் மற்றும் ஆன்மாவை வெற்றி கொள்வாயாக! உனது ஒரு பார்வையிலேயே எனது அத்தனை வேதனைகளையும் துடைத்து விடுவாயாக!

در دو عالم مرا عزیز توئی　و آنچہ میخواہم از تو نیز توئی

ஈருலகிலும் நீ ஒருவன் மட்டுமே எனக்கு பிரியமானவன். உன்னிடத்தில் இருந்து நான் பெற விரும்புவது உன்னை மட்டுமே!.

மகத்துவமிக்க இறைவன். அளவற்ற புகழுக்குரியவன். ஏற்கனவே இருந்திருக்கக்கூடிய எந்த ஒரு மூலப்பொருளையும் மூலாதாரத்தையும் கொண்டு அல்லாமல் தனது தீர்ப்பினாலும் கட்டளையினாலும் மட்டுமே எல்லா உடல்களையும் ஆன்மாக்களையும் படைத்து தனது மாபெரும் ஆற்றலை வெளிப்படுத்தி உள்ளான். மேலும் அறிவாற்றலின் நேர்த்தி அடைந்த ஒழுக்கநிலைகளையும் எல்லா நபிமார்களுக்கும் எந்த ஒரு பயிற்சியாளரோ, ஆசிரியரோ இன்றி, தானே வழங்கி தனது நித்திய கிருபையின் அடையாளத்தை வெளிப்படுத்தினான்

அல்லாஹ்!! அவன் தூயவன்! இரக்கம் மற்றும் கருணை உள்ளவன்! அநித்தியமான ஏழைகளாகிய நமக்கு எந்த ஒரு சிறப்புத் தகுதியின் அடிப்படையிலும் அல்லாமல் நமக்குத் தேவையான எல்லாவற்றையும் அருளினான்.

நமது பௌதிக தேவைகளுக்காகவே சூரியனையும், சந்திரனையும், மேகங்களையும், காற்றையும், பணியமர்த்திய படி படைத்தான். அதனதன் காலத்தில் அவனே வேதங்களாகிய தவ்ராத், சுவிசேஷங்கள், குர்ஆன் மற்றும் அனைத்து விண்ணின் வேதங்களையும்இறக்கினான்.

இறைவா! உன்னை அடையக்கூடிய பாதையை அடைய செய்தமைக்கும் மேலும் உனது தூய வேதங்களை எமக்கு அருளி, எண்ணத்திலும் சிந்தனையிலும் தவறுகள் இழைத்துவிடாதபடி எம்மை காத்தமைக்கும் உனக்கே எண்ணற்ற நன்றிகள்உரித்தாகுக!

நபிமார்களின் தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.:.பா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரது குடும்பத்தார்கள், வாரிசுகள் மீதும், அன்னாரது சஹாபா மீதும் (இறைவனின் சாந்தியும் சமாதானமும் இருப்பதாக). நாங்கள் சலாத்தைப் பறைசாற்றுகிறோம். அவர்கள் மூலமாகவே பாதையைத் தவறவிட்ட முழு உலகத்தையும் இறைவன் வழிநடத்தினான். தவறாக வழிநடத்தப்பட்டிருந்த மக்களை மீண்டும் நேரான பாதையின்பால் திரும்பக் கொண்டு சேர்த்த அருளாளனும் ஆசிரியரும் அவரே.



இணைவைத்ததில் இருந்தும் விக்கிரக வழிபாடு என்ற சாபத்தில் இருந்தும் விடுதலை அளித்த நற்குணம் உள்ளவரும் இரக்கம் உள்ளவரும் அவரே. ஒளியாக நின்று ஒளிவீசி ஏகத்துவம் என்னும் ஒளியைப் பரவச் செய்தவரும் அவரே. நோயுற்ற இதயங்களை குணமாக்கி நேர்மையின் பாதையில் நடக்கச் செய்த மருத்துவரும் சுகம் அளித்தவரும் அவரே.

ஆன்மிக வாழ்வளிக்கும் ஜீவ ஊற்றின் மூலம் மரணமுற்றவர்களை உயிர்த்தெழ செய்து மேலான அற்புதத்தை செய்தவரும் அவரே. தனது உம்மத்தின் நிமித்தம் வேதனையும் துக்கமும் கொண்ட அருளாளனும் கருணையாளனும் அவரே. மரணத்தின் கோரப்பிடியில் சிக்கி இருந்த எங்களை மீட்ட தீரரும் வீரரும் அவரே. தனது இறைவன் முன்பு பணிவுடன், முற்றிலும் தலைகுனிந்த வண்ணம் தன்னை இழந்த தன்னலமற்ற தாழ்மையானவர் அவரே.

இறைவனின் ஏகத்துவத்தின்பால் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, அறிவுக் கடலாக இருந்து, மகத்துவமிக்க இறைவனே மெச்சும்படி, இறைவனைத் தவிர வேறொன்றையும் ஒரு பொருட்டாகவே கொள்ளாதவர் அவரே. இறைவனின் ஆற்றலினாலான அற்புதர் அவர். முறையான கல்வி அறிவு இல்லாதிருந்தும் இறைஞானத்தின் எல்லா எல்லைகளையும் மிஞ்சி எல்லா தேசங்களின் மக்களுக்கும் அவர்கள் பாதிக்கப்பட்டிருந்த அவர்களின் தவறுகள் மற்றும் பிழைகளை விளங்கச் செய்தவர் அவரே.

(தொடரும்...)




**ஆ**ண்டின் கடைசி நாள்கள் எஞ்சியுள்ள நிலையில், இன்னொரு புதிய ஆண்டை நோக்கி காலக் கடிகாரம் மெதுவாக நகர்கிறது. உலகின் பல முக்கிய நகரங்களில் கொண்டாட்டங்களும் கவுண்ட்டவுன்களும் நடைபெறும். இந்த நேரத்தில், கடந்த ஆண்டையும் வரவிருக்கும் ஆண்டையும் நினைத்து பலர் சிந்திக்கிறார்கள்.

ஆனால், இதற்கிடையில் ஒரு ஆழமான கேள்வி பெரும்பாலும் கேட்கப்படாமல் போகிறது:

## *காலம் என்றால் என்ன?*

காலம் என்பது கடிகாரத்தின் துடிப்பால் அளவிடப்படும் தருணங்களின் தொடர்ச்சியா? அல்லது அது நம் புரிதலைத் தாண்டிய ஒன்றா? காலம் என்பது நம் இருப்பின் சாரத்தையே பேசும் ஆழமான ஒன்றா?

நாம் நிச்சயமாக அறிந்த ஒன்று உண்டு: காலம் யாருக்காகவும் காத்திருக்காது. மனிதர்கள் அதிகம் விரும்பும் ஒன்றாக காலம் இருக்கிறது. ஆனால் அதனை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறோம். இதில்தான் அந்த முரண்பாடு உள்ளது. நாம் முழுமையாகப் புரியாத ஒன்றை நாம் விரும்புகிறோம்.

இஸ்லாமிய பார்வையில் காலத்தை நோக்கினால், காலம் அல்லாஹ்வின் நம்பிக்கையாக (அமானத்தாக) வழங்கப்பட்ட ஓர் அருளாக இருப்பது தெளிவாகிறது. அதை நற்காரியங்களில் புத்திசாலித்தனமாக பயன்படுத்த வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்தப் -பட்டுள்ளது:

وَالْعَصْرِ ۙ اِنَّ الْاِنْسَانَ لَفِىْ خُسْرٍ ۙ اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ
وَتَوَاصَوْا بِالْحَقِّ ۙ وَتَوَاصَوْا بِالصَّبْرِ

“காலத்தின் மீது சத்தியமாக!
நிச்சயமாக மனிதன் இழப்பிலேயே இருக்கிறான்.
ஆனால் ஈமான் கொண்டு, நற்செயல்கள் செய்து,
ஒருவருக்கொருவர் உண்மையை அறிவுறுத்தி,
ஒருவருக்கொருவர் பொறுமையை
அறிவுறுத்துவோர் தவிர.”
(சூரா அல் அஸ்ர், அத்தியாயம் 103:24)

இந்த குர்ஆன் அத்தியாயம், காலத்தின் தற்காலிக தன்மையை மனிதனுக்கு நினைவூட்டுகிறது. காலத்துடன் ஓடும் போட்டியில் நாம் இழப்பாளர்களாக மாறாமல் இருக்க, அதற்கேற்ப செயல்பட வேண்டும் என்று எச்சரிக்கிறது.

## *காலத்தின் இயல்பு*

மனிதர்களாகிய நாம் சிந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறோம்: காலத்தை உண்மையாகப் புரிந்து கொள்வது என்றால் என்ன?

பார்மெனிடீஸ், ஹெரக்லைட்டஸ், இமாம் அல்-கஸாலி போன்ற தத்துவஞானிகளும், விஞ்ஞானிகளும், காலத்தின் இயல்பை நூற்றாண்டுகளாக விவாதித்து வந்துள்ளனர். அரிஸ்டாட்டிலுக்கு சொந்தமானதாகக் கூறப்படும் ஒரு கூற்று உள்ளது:

*காலம் அனைத்தையும் சிதைக்கிறது. காலத்தின் சக்தியால் அனைத்தும் பழையதாகி, காலப்போக்கில் மறக்கப்படுகிறது.*

இதிலிருந்து நாம் ஒரு விஷயத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்: காலம் தொடர்ந்து செல்கிறது. அது யாருக்காகவும் நிற்காது.

சிலருக்கு காலம் என்பது கடந்த காலத்திலிருந்து நிகழ்காலம் வழியாக எதிர்காலம் வரை நீளும் ஒரு நேர்கோடு. மற்றவர்களுக்கு அது பருவமாற்றம் அல்லது விண்மீன் கோள்களின் சுழற்சி போல ஒரு வட்டச்சுழற்சி.

இஸ்லாமிய பார்வையில், காலம் அல்லாஹ்வின் படைப்பும் அதே நேரத்தில் ஒரு மர்மமும் ஆகும். எளிமையாகச் சொல்வதானால், காலம் என்பது அல்லாஹ்வின் இறை தீர்மானத்தின் படி நிகழ்வுகள் நடைபெறும் ஒரு பரிமாணம்.

இதைக் கவனியுங்கள்: காலம் ஒரு படைப்பாக இருந்தால், அதற்கு அப்பால் என்ன உள்ளது? அனைத்தும் காலப்போக்கில் அழிந்துவிட்டால், காலமும் அழியுமா? அது அழிவதும் அதன் சொந்த ஓட்டத்திற்குள் தான் நடக்குமா?

அல்லாஹ் தன்னை அல்-அவ்வல் மற்றும் அல்-ஆகிர் என்று கூறுகிறான். காலத்துக்கும் இடத்துக்கும் அப்பாற்பட்டவன்.

இந்த உண்மை நம்மை பணிவுடன் நிலைநிறுத்த வேண்டும். நாம் தற்காலிகமானவர்கள் என்பதையும், காலத்திற்கும் அனைத்து வரம்புகளுக்கும் அப்பால் இருப்பவனின் மீது நாம்சார்ந்து இருப்பதையும் நினைவூட்டுகிறது.

## காலம் ஒரு சோதனை



காலம் ஒரு சோதனையாக இருந்தால், நாம் அதில் வெற்றி பெறுவோமா?

ஒரு விஷயம் மட்டும் நிச்சயம்: நாம் காலத்தைப் பயன்படுத்தினாலும் வீணடித்தாலும், காலம் தொடர்ந்து சென்று கொண்டே இருக்கும்.

காலத்தைப் புரிந்து கொள்ள நாம் வாழ்க்கையைப் பார்வையிட வேண்டும். இஸ்லாமிய வாழ்க்கைப் பார்வை, காலத்தை ஒரு சோதனையாகக் கருதுகிறது. ஒவ்வொரு விநாடியும், நிமிடமும், மணியும், தருணமும் அல்லாஹ்வை நெருங்கவும் அல்லது அவனிடமிருந்து விலகவும் ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்படுகிறது:

“பலர் வீணடிக்கும் இரண்டு அருள்கள் உள்ளன: நல்ல உடல்நலம் மற்றும் ஓய்வு நேரம்.” (சுனன் இப்னு மாஜா, கிதாபுஸ் ஸுஹ்த், ஹதீஸ் 4170)

இந்த ஹதீஸ், நாம் நேரத்தை எவ்வாறு செலவிடுகிறோம் என்பதை சிந்திக்க வைக்கிறது. இறைவணக்கம், பரிவு, தனிநபர் வளர்ச்சி போன்ற அர்த்தமுள்ள செயல்களில் நாம் நேரத்தை முதலீடு செய்கிறோமா? அல்லது கவனச்சிதறல்களில் அதை வீணடிக்கிறோமா என்று நம்மை நாம் கேட்கச் செய்கிறது.

கிரெகோரியன் நாட்காட்டி என்பது காலத்தை ஒழுங்குபடுத்த மனிதர்கள் உருவாக்கிய பல முறைகளில் ஒன்றே. இருந்தாலும், புதிய ஆண்டு வருகை பெரும்பாலும் சுய ஆலோசனைக்கு வழி வகுக்கிறது. உண்மையில், புதிய ஆண்டு மட்டுமல்ல. ஒவ்வொரு நாளும் நம் நோக்கங்களைப் புதுப்பிக்க ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

### ஒரு விஷயம் தெளிவாக இருக்க வேண்டும்:

காலம் என்னவென்று நாம் முழுமையாகப் புரிந்து கொண்டாலோ இல்லையோ, காலம் நமக்குச் சொந்த -மானது அல்ல. அதை நிர்வகிக்க மட்டுமே நமக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், ஒருமுறை செலவழிக்கப்பட்ட காலம் மீண்டும் ஒருபோதும் திரும்பக் கிடைக்காது.

(அல் ஹகம் டிசம்பர் 2024)

**(தமிழில்: A. நாஸிர் அஹ்மது)**

## தப்லீக்

***ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*** ஹிக்மத் என்பதன் ஒரு பொருள், அறிவு என்பதாகும். தப்லீக் செய்வதற்கு அறிவு இருக்க வேண்டும். ஒரு சிலர் நமக்கு சாக்குப்போக்குகள் கிடைத்து விட்டன. எங்களிடம்தான் தப்லீக் செய்வதற்குரிய அறிவு இல்லையே என்று கூறுகின்றனர். இக்காலத்தில் இந்த சாக்கும் ஒரு காரணமாக முடியாது. அறிவு ரீதியாகவும் நம்மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அருள் செய்து விட்டார்கள். ஜமாஅத்தின் நூல்களில் அதற்கான அறிவுகள் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளன. சாதாரண முயற்சியினால் கூட நமக்கு கணிசமான அளவுக்கு அவை அறிவு முத்துக்களை வழங்கி விடுகின்றன. பிறகு இணைய தளங்கள் உள்ளன. பெரும்பாலானவர்களுக்கு நாம் தூதுச் செய்தியை அவர்களிடம் கொண்டு சேர்க்கிறபோது எம்மிடம் இப்போது நீண்ட விவாதம் செய்வதற்கு நேரமில்லை என்று கூறி விடுகின்றனர். அவர்களுக்கு நாம் பிரசுரங்கள் கொடுக்கலாம். இணையதளத்தில் தந்தால் ஆர்வமுள்ளவர்கள் பெரும்பாலார் அதில் ஆர்வமாகவே இருக்கின்றனர். அவர்களுக்கு உடனே நேரம் தர முடியா விட்டால் பிறகு அவர்கள் அது குறித்து தெரிந்து கொள்கின்றனர்...... ஒன்று முதலில் நமது அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம். அதன் மூலம் எவருடன் அறிவுப்பூர்வமாக பேச வேண்டியதுள்ளதோ அதே அளவுக்கு தரத்துடன் பேச முடியும். இரண்டாவது நமது வெப்சைட்டில் எங்கு அறிவு ரீதியான பதில் கிடைக்கும் என்று நமக்கு தெரிந்திருக்க வேண்டும். பல்வேறு மார்க்கத்துடன் தொடர்பு வைத்திருப்பவர்களுடனும் இறைஇருப்பை மறுப்பவர்களுடனும் அவர்களின் எண்ணங்களுக்கும் சிந்தனைகளுக்கும் ஏற்ப அவர்களுக்கு நாம் சான்றுகளைத் தர வேண்டியதிருக்கிறது. (ஜுமுஆ குத்பா 08.09.2017)

# இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது!

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் 13.09.1996 அன்று இலண்டன் ஃபஸல் பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ பேருரை

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*



உலகம் நிலையற்றது என்ற உணர்வு செயல்களைக் கண்காணிப்பதற்குத் தேவையாகும். ஆனால் இறந்த பின்பும் மறு வாழ்வு உண்டு என்ற உணர்வு இல்லாவிட்டால் இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது என்ற எண்ணம் கூட எந்தப் பயனையும் தராது. இதற்கு மாற்றமாக நிலையற்றது என்ற எண்ணம் அந்த சூழ்நிலையில் பாவங்களை அதிகமாக்கவும் வகை செய்கிறது. அதாவது இன்ப வாழ்க்கையை இப்போதே அடைவோம். பின்னர் வாய்ப்பு கிடைக்காது எனக் கருதுவர். ஒரே கருத்து ஒரு வகையில் நன்மையைப் போதிக்கிறது. இன்னொரு கோணத்தில் தீமையைத் தூண்டுகிறது. இந்த உலகில் காணப்படுகின்ற தீய ஒழுக்கமுடைய மக்களும் அரசாங்கங்களும் இந்த உலகம் நிலையற்றது என்பதை அறிவர். ஆனால் இறந்த பின்னர் உயிர் பெற்று எழுவது பற்றிய எண்ணம்தான் இல்லை. மரணத்திற்குப் பின் கணக்குக் காட்ட வேண்டும் என்ற உணர்வில்லை. எனவே செய்ய வேண்டியதை இவ்வாழ்க்கையில் செய்வோம். பின்னர் வாய்ப்பு கிடைக்காது என்ற குரல் அவர்கள் உள்ளத்திலிருந்து எழுகிறது. ஆனால் இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது என்ற உணர்வை மறுமை வாழ்வுடன் தொடர்புபடுத்தினால் மனிதன் தன்னை திருத்திக் கொள்வதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருக்க முடியாது. நான் எந்த நிலையில் இறைவன் முன் செல்வேன்; எப்போது செல்வேன் என்ற கவலை இருந்தால் அவன் தன் செயல்கள் தொடர்பாக கவனமாகவே இருப்பான்.

இந்த ஜமாஅத் முழு உலகையும் சீர்திருத்தும் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. இது மாபெரும் பொறுப்பாகும். அல்லாஹ்தான் இந்தப் பொறுப்பை ஒப்படைத்துள்ளான். இந்த சீர்திருத்த வேலையை இந்த ஜமாஅத் கண்டு அறிந்துள்ளது. ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மேல் அல்லாஹ் விண்ணிலிருந்து இறக்கிய தண்ணீர் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தில் தனது செழித்தோங்களைக் காட்டியுள்ளது. வாழ்வின் எல்லா வகைத் தோற்றங்களும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாம் இதற்கு கணக்குக் காட்ட வேண்டும் என்பதை மறந்து விட்டு, இது நமக்கும் கிடைக்க வேண்டியதாக இருந்தது எனக் கருதி கவனமற்றவராக இருந்தால், நம்மிடம் ஏதும் இல்லாதிருக்கும் நிலையில் இங்கிருந்து விடைபெறும் நேரம் வந்து விடலாம். நல்ல ஜமாஅத்தில் இணைந்த ஒவ்வொரு தனி நபரும் கட்டாயமாக ஒரே பயனைத்தான் அடைவர் என்றில்லை. மாறாக சில வேளைகளில் சிலர் அந்த ஜமாஅத்திற்குக் கிடைத்துள்ள அருள் எந்த அளவு அதிகமாக இருக்குமோ அந்த அளவு அதிகமான இழப்பிற்கும் ஆளாகி விடலாம்.

ஜமாஅத் அடிப்படையில் அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தை மேலான குறிக்கோளுக்காக தேர்ந்தெடுத்துள்ளான் என்பது உண்மைதான். ஆனால் ஜமாஅத்தில் உள்ள ஒவ்வொரு தனி நபரும் பாதுகாப்பாகவும் அமைதியிலும் உள்ளார் என்பது வேறு விஷயமாகும். ஒவ்வொரு தனி நபரும் கட்டாயமாக பாதுகாப்பாகவும் அமைதியிலும் இல்லை. எனவே எந்த அஹ்மதியின் உள்ளத்திலாவது இந்த எண்ணம் தோன்றவோ, தோன்ற ஆரம்பிக்கவோ செய்கிறது என்றால், அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த துஆவைச் செய்ய வேண்டும். அதாவது எனக்கு நேர்வழியில் உறுதியை வழங்குவாயாக. உண்மையில் உறுதியை வழங்குவாயாக என துஆ செய்ய வேண்டும். நம்முடைய நற்செயல்களுக்கு என்ன உறுதி உள்ளது? அல்லாஹ் நம்மை நன்மையில் நிலைத்திருக்கச் செய்யவில்லை என்றால் நம்மில் எவரும் நல்ல முடிவை அடைய முடியாது. என்னுடைய செயல்கள் எந்த திசைகள் செல்கின்றன? நேர்வழியின் பக்கமா செல்கின்றன? உலகின்பால் என் கவனம் எந்த அளவு உள்ளது என்பதை ஒவ்வொரு நொடியிலும் நாம் கவனிக்க வேண்டும்.

உலகத் தொடர்புகளைப் பொருத்தவரை, ஒவ்வொரு பொருள் தொடர்பாகவும் தனிப்பட்ட சோதனை மனிதனுக்கு ஏற்படுகிறது. உலகம் நிலையற்றது என்றால் நான் சென்று விடுவேன் என்பது பொருளன்று. நிலையற்றது என்றால் என்னுடைய தொடர்புகள், என்னுடைய உறவுகள், என்னுடைய சம்பாத்தியங்கள் எல்லாம் என்னை விட்டுச் சென்று விடும் என்று பொருளாகும். சில வேளைகளில் நீங்கள் இருக்கும் போதே அவை


சென்று விடும். சில வேளைகளில் நீங்கள் செல்வங்களை விட்டுச் சென்று விடுவீர்கள். இன்னும் சில வேளைகளில் நீங்கள் இருக்கும் போது செல்வங்கள் உங்களை விட்டுச் சென்று விடும். சில வேளை நீங்கள் உங்கள் அன்பர்களை விட்டுச் சென்று விடுவீர்கள். இன்னும் சில வேளைகளில் உங்கள் அன்பர்கள் உங்களை விட்டு விட்டு மறுமையின் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

எங்களுக்கு சோதனைகளின் தொடரே வந்து விட்டது என சிலர் துயரத்துடன் கடிதம் எழுதுகின்றனர். இன்னார் நேற்று இறந்து விட்டார்; இன்னார் இன்ன நாள் இறந்து விட்டார். தற்போது இன்னார் உடல்நலமில்லை என செய்தி வருகிறது. இப்படி ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்களாக இது தொடர்ந்து எங்களுக்கு வந்து கொண்டிருக்கிறது என எழுதுவர். அவர்களிடம் நான் கூறுவேன். ‘இன்னா லில்லாஹ்.... அதாவது அல்லாஹ்வுடையது அல்லாஹ்விடம் சென்று விட்டது’ என்பதை தம்மிடம் இருந்து சென்று விட்டதாக மட்டும் சொல்லாதீர்கள். அதாவது இழந்து விட்டதற்காக மட்டும் சொல்லாதீர்கள். ‘அவர் அல்லாஹ்வுக்குரியவர்; அவர் அல்லாஹ்விடம் சென்று விட்டார்’ என்று கூற அல்லாஹ் கற்றுத் தரவில்லை. மாறாக ‘நாம் அல்லாஹ்விற்குரியவர்; அல்லாஹ்விடமே செல்லவுள்ளோம்’ என்று சொல்லவே கற்றுத் தந்துள்ளான். அதாவது சென்று விட்டவரைப் பற்றி கவலை அடையாமல், நாமும் செல்ல வேண்டியவர் தாம் என்பதை நினைத்து நம்முடைய பயணத்தைப் பற்றியே கவலை கொள்ள வேண்டும். நாம் அல்லாஹ்விற்கு உரியவர்களாக இல்லாத நிலையில் திரும்புவோமா என்று கவலை கொள்ள வேண்டும். இறந்தவர் தமது கணக்குகளுடன் அல்லாஹ்விடம் சென்று விட்டார். அவரைப் பற்றி கவலை அடைந்து நீங்கள் அல்லாஹ்வையே இழந்து விட்டால் இன்னா லில்லாஹி என எவ்வாறு கூறுவீர்கள்? அவருக்காக நீங்கள் எவ்வளவு ஒப்பாரி வைத்து அழுதாலும் அவர் திரும்பி வர மாட்டார். நீங்கள்தாம் அங்கே செல்ல முடியும். இது ஒன்றுதான் முடியும். மனிதன் என்ன செய்தாலும் இறந்தவர் இங்கே திரும்பி வர மாட்டார். நீங்கள்தாம் அங்கே செல்ல முடியும். ஆனால் நீங்கள் இறைவனை மறந்து விட்டால் நீங்கள் செல்லும்போது முன்னால் போனவரை அங்கேயும் சந்திக்க முடியாமல் போய்விடும். இதைத் தவிர வேறு தீர்ப்பே கிடையாது.

மனிதனுக்கு துன்பம் கட்டாயம் ஏற்படத்தான் செய்யும். ஆனால் அந்தத் துன்பத்தின் எதிரொலி மிக அற்புதமாக இருக்கும். அது வீணாகாது. அது மட்டுமின்றி அல்லாஹ்வுக்காக தாங்கிக் கொள்ளும் ஒவ்வொரு துன்பத்திற்கும் நற்கூலி உண்டு. அல்லாஹ் அவருடைய பாவங்களை மன்னிப்பான்; பல பாவங்களைப் பொருட்படுத்தாமல் விடுவான். அவற்றை திருத்திக் கொள்வான். ஒரு பொருளை இழக்கும் வேளையில் மனிதன் மேற்கொள்ளும் இந்த எதிர் விளைவு இவ்வாறு பல நன்மைகள் தரக்கூடும். ஆனால் எதிர் விளைவு வேறு வகையாக அதாவது தவறானதாக இருந்தால், ஏற்கனவே அவரிடம் இருந்ததும் போய் விட்டது. இனிமேல் உள்ளவற்றையும் இழந்து கொண்டிருப்பார். அழுது புலம்பலைத் தவிர வாழ்க்கை எதற்கும் உதவாது. இறந்த பின் இன்னும் அதிகமாக அழுது புலம்ப வேண்டியதிருக்கும்.

உலகம் நிலையற்றது என்பதன் பொருளை உணராதவர் மிகவும் அறிவற்றவராவார். ஓரிரு ஆண்டுகளோ ஆயிரம் ஆண்டுகளோ முன் பின் ஆனாலும் நாம் எல்லாரும் அல்லாஹ்வுக்–குரியவர்; அவனிடமே நாம் திரும்ப வேண்டும் என்பது உறுதி. இன்று இல்லாவிடில் நாளை திரும்புவோம். எனவே நம்முடைய திரும்புதல் பற்றி கவலை அடைய வேண்டும். இன்னா லில்லாஹ்.... நமக்கு கற்றுத் தரும் நிலையற்ற தன்மையின் பொருள் இதுதான். ஆனால் மக்கள் சென்று விட்டவர்கள் பற்றிக் கவலை அடைவார்கள்; தங்களைப் பற்றிக் கவலை கொள்வதில்லை.

ஒருவர் இறந்து போவதைக் கண்டால் உடனே நாமும் இறைவனுக்குரியவர்; நாமும் அவனிடம் செல்ல வேண்டியவர் என நம்முடைய திரும்புதல் பற்றிய எண்ணம்தான் முதலில் வர வேண்டும். ஜனாஸா தொழுகையில் சொல்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ள துஆவாகிய,




‘அல்லாஹ்வே! எங்களுள் உயிருள்ளவர்களையும் இறந்தவர்களை–யும் மன்னிப்பாயாக’ என்பதிலும் உயிருள்ளவரை முதலில் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது இறந்தவர் பற்றி நீங்கள் ஏன் கவலை அடைய வேண்டும்? இவர் சென்று விட்டார்; உயிருள்ளவர்களின் மன்னிப்பிற்கு துஆ செய்வதே மிகவும் தேவையானது. மரணத்திற்கு முன் மன்னிப்பு கிடைக்க வேண்டும். மரணத்திற்குப் பின்பும் துஆ பயன் தரும். ஆனால் உயிருள்ள போதே மன்னிப்புத் தேடித் தரும் துஆவை விட பெரிய துஆ வேறு இருக்காது. அந்த துஆவில் தொடர்ந்து, ‘இறைவா! எங்களில் இப்போது வந்திருப்பவர்களையும் இங்கு வராதவர்களையும் மன்னிப்பாயாக’ என்று துஆ செய்தார்கள். அதாவது முதலில் இங்கு இருந்தவர்களுக்காகவும் இங்கு வராதவர்களுக்காகவும் மன்னிப்புக் கேட்க கற்றுத் தந்தார்கள். அடுத்து எங்களுள் இறப்பவர்கள் ஈமானின் நிலையில் இறக்க வேண்டும் என துஆ செய்ய கற்றுத் தந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களின் துஆக்களும் திருக்குர்ஆனின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. எனவே எங்கும் எந்த முரண்பாட்டையும் காண முடியாது. எல்லாமே திருக்குர்ஆனின் ஒளியில் ஒளிமயமானவை ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணங்கள் எந்த அளவு திருக்குர்ஆனின் போதனைகளோடு ஒன்றியுள்ளன என்பதைப் பற்றி நீங்கள் சிந்தனை செய்தால் வியப்பின் கடலில் மூழ்கி விடுவீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவுரைகள் பற்றி சிந்தனை செய்தால்தான் திருக்குர்ஆனின் பொருளை உணர முடியும் என்பதே உண்மையாகும். திருக்குர்ஆனை மிகவும் விரிவாக விளக்கியுள்ளேன் என அல்லாஹ் கூறுகிறான். ஆனால் சிந்தனை செய்யும் மக்களுக்கு தான் விளக்கமாக உள்ளது என்றும் கூறியுள்ளான். இதனையும் சிந்திக்க வேண்டும். அதாவது திருக்குர்ஆன் யாருக்காக விளக்கமாக தெளிவாக உள்ளது?

لِقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ சிந்தனை செய்யும் மக்களுக்குத்தான் தெளிவாக உள்ளது.

திருக்குர்ஆன், அறிவாளியும் அறிவற்றவரும் ஒன்றுபோல் புரிய முடிவது போன்ற தெளிவானதன்று. மேல்வாரியான விஷயங்கள்தான் எல்லாம் தெளிவாகப் புரியக் கூடியவை. திருக்குர்ஆன் மேல்வாரியான விஷயங்களை மட்டும் கூறவில்லை. திருக்குர்ஆனின் கருத்துக்கள் மிகத் தெளிவானவையாக இருப்பினும் அதில் ஆழமான விஷயங்கள் இருக்கின்றன. எனவே அதன் மேலோட்டமான விஷயங்களைப் புரிந்து கொண்டால் நீங்கள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டீர்கள் என்று பொருளன்று. மேல்மட்டத்தைக் கண்ட பின் நீங்கள் அதன் ஆழத்தில் சென்றால் உண்மைகளின் பல அடுக்குகளைக் காண்பீர்கள். ஒவ்வோர் அடுக்கிலும் இன்னும் பல உண்மைகளையும் நேர்வழிகளையும் காண்பீர்கள். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அறிவுரைகளின் மூலமே நாம் இந்தக் கருத்துகளைப் புரிந்துள்ளோம்; புரிந்து கொள்கிறோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இந்த விஷயத்தைப் பல கோணத்தில் விளக்கியுள்ளார்கள். நீங்கள் உங்கள் இம்மையையும் மறுமையையும் இழந்து விடும் அளவுக்கு இவ்வுலக விஷயங்களில் மூழ்கி விடாதீர்கள் என அறிவுறுத்தியுள்ளார்கள். நீங்கள் இறக்கும்போது நேற்று கூட என்னிடம் ஏதும் இருக்கவில்லை என்று ஏங்கும் நிலை வந்து விடக் கூடாது எனப் போதித்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களைக் கூறுவதற்கு முன் முதலாவதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவுரையைக் கூறுகிறேன்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது தோளில் கை வைத்துக் கூறினார்கள்: நீர் இந்த உலகில் பயணியைப் போல் வாழ்வீராக. பயணி ஒருவருக்கு எப்பொருளிலும் எந்த அதிகாரமும் இருப்பதில்லை. வெளியூர்காரர் என்றால் அவருக்கு அந்த ஊரில் எந்த உரிமையும் இருப்பதில்லை. அவர் வேறு ஊரைச் சார்ந்தவராவார். பயணி எந்த இடத்தையும் தன்னுடையது எனக் கருதி அங்கே தங்கி விட முடியாது. இவ்வுலகம் நிலையற்றது



என்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு விளக்கினார்கள். ஓர் இளம் வயது வாலிபரின் தோளைப் பிடித்து முழு வாழ்நாளும் இந்நிலையில் கழித்துக் கொள்வீராக எனக் கூறினார்கள்.

இந்த விஷயத்தை விளக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது கண்ணியமிக்க இந்து குடும்பத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திப்பதற்காக மட்டும் காதியான் வந்திருந்தார். ளுஹர் தொழுகைக்கு முன் அவர்களிடம் வந்தார். அவருக்கு ஏதேனும் அறிவுரை வழங்க வேண்டும் என நாட்டம் தெரிவித்தார். ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள்: ஒவ்வொருவரின் பரிவுகாட்டுதலின் முறையும் வெவ்வேறாகும். நீங்கள் ஒரு மருத்துவரிடம் சென்றால், அவர் காட்டும் பரிவு உங்கள் நோயிற்கு மருத்துவம் செய்வதாகும். நீங்கள் ஓர் ஆட்சியாளரிடம் சென்றால், அவர் உங்களை ஏதேனும் கொடியோனின் கொடுமையிலிருந்து பாதுகாக்கலாம். இவ்வாறு ஒவ்வொருவரின் பரிவும் வெவ்வேறானதாகும். நம்முடைய சார்பாக பரிவு என்னவென்றால், நாம் உங்களுக்கு அறிவுறுத்துவோம். இவ்வுலகம் சில நாள்களுக்கு மட்டும் உள்ளதாகும். இந்த எண்ணம் உள்ளத்தில் உறுதியடைந்து விட்டால் எல்லா வகையான பொய்யான மகிழ்ச்சிகளும் அழிந்து விடும்.

அதாவது நான் யாருக்காக இதை எல்லாம் செய்கிறேனோ அவரோ நானோ எந்த நொடியிலும் பிரிந்து விடலாம் என்ற எண்ணம் இருந்தால் அவருக்கு நடுக்கம் ஏற்படும். மறுமையைப் பற்றிய உணர்வு எந்த அளவு இருக்குமோ அந்த அளவு இந்த அதிர்ச்சியும் அதிகமாக இருக்கும். சில பெண்களுக்கு தங்களின் கணவர் (மரணித்து) விடுவாரோ என்ற அச்சமும் அதிர்ச்சியும் ஏற்பட்டு அந்த அதிர்ச்சியால் இறந்தே போய் விடுகின்றனர். அந்தப் பெண்கள் ஒருவேளை அவர் வாழ்விலே வராத அந்த

நிகழ்ச்சி குறித்து அதிர்ச்சி அடைந்து தன் வாழ்க்கையை வீணாக்கி விடுகிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த எண்ணம் உறுதியாகி விட்டால் எல்லாப் பொய்யான மகிழ்ச்சிகளும் போய் விடுகின்றன. இங்கே பொய்யான மகிழ்ச்சி என்று கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் விலை உயர்ந்த முத்து போன்றது. அதனை அவ்விடத்திலிருந்து மாற்ற முடியாது. பொதுவாக மகிழ்ச்சிகள் அழிந்து போய் விடும் எனக் கூறினால், இது என்ன அறிவுரை? மகிழ்ச்சியை அழிப்பதும் ஓர் அறிவுரையா எனக் கேட்கலாம். அ(வ்விறை)வனன்றி அனைத்தும் பொய்யே

**உலகம் நிலையற்றது என்பதன் பொருளை உணராதவர் மிகவும் அறிவற்றவராவார். ஓரிரு ஆண்டுகளோ ஆயிரம் ஆண்டுகளோ முன் பின் ஆனாலும் நாம் எல்லாரும் அல்லாஹ்வுக்குரியவர்; அவனிடமே நாம் திரும்ப வேண்டும் என்பது உறுதி. இன்று இல்லாவிடில் நாளை திரும்புவோம். எனவே நம்முடைய திரும்புதல் பற்றி கவலை அடைய வேண்டும். இன்னா லில்லாஹ்.... நமக்கு கற்றுத் தரும் நிலையற்ற தன்மையின் பொருள் இதுதான். ஆனால் மக்கள் சென்று விட்டவர்கள் பற்றிக் கவலை அடைவார்கள்; தங்களைப் பற்றிக் கவலை கொள்வதில்லை.**

என அவர்கள் கூறியுள்ள அந்தக் கருத்தையே பொய் மகிழ்ச்சி என்ற சொல்லில் கூறியுள்ளார்கள். மேலும் உண்மையான மகிழ்ச்சிகளும் உண்டு என்றார்கள். இந்த எண்ணம் உண்மையான மகிழ்ச்சிகளுக்கு வலுவூட்டுகிறது என்றும் கூறினார்கள்.

இந்த அறிவுரை அந்த இந்து அதிகாரிக்கு புரிந்ததா புரியவில்லையா என அல்லாஹ் அறிவான். அந்த அதிகாரி மிகவும் செல்வாக்குடையவர். அவருக்கு இந்த அறிவுரை கூறினார்கள். அதாவது நீங்கள் உங்கள் செல்வத்தையும் செல்வாக்கையும் இந்த சிறிது நாள்களுக்கு மட்டும் உரிய உலக வாழ்விற்காக மட்டும் பயன்படுத்தினால் நீங்கள் பொய்யான மகிழ்ச்சியில்தான் வாழ்வீர்கள். இந்த அறிவுரை ஓர் அதிகாரிக்கு மட்டுமின்றி முழு உலகத்திலுள்ள எல்லா அதிகாரிகளுக்கும் ஒன்று போல் பொருந்துவதாகும்.

கூறுகின்றார்கள்: இந்த உலக வாழ்க்கை எவ்வளவு நாள்களுக்குரியது என்ற எண்ணம் இல்லாத காரணத்தினால் தான் மக்கள் பெரும் திட்டங்களிலும் தகாத நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். மரணம் முன்னால் நிற்கிறது என்பதைக் கண்டு கொண்டால் மனிதன் பாவத்திலிருந்து விலகி விடுவான். இறைவனை அறிந்து கொண்ட மக்கள் தங்களுக்கும் தங்களுடைய நண்பர்களுக்கும் என்ன நேரப் போகிறது என்பதை உணர்ந்து கொண்டிருப்பர்.

அதாவது சுற்றுச் சூழலில் நடைபெறுவதைக் கண்டு தங்களின் நிலையை அறிந்து கொள்வர். இதனையே நான் இன்னா லில்லாஹ்... என்பது தொடர்பாக விளக்கினேன். எவரேனும் இறப்பதைக் கண்டால் தங்களைப் பற்றி கவலை அடைய வேண்டும். அவர்களைப் பற்றிய கவனம்தான் அதிகமாக இருக்க வேண்டும். ஒரு நாள் நானும் இதுபோல் போக வேண்டியவன்தான். அதுவும் பதில் சொல்ல கடமைப்பட்ட இடத்திற்குத்தான் செல்ல வேண்டியதுள்ளது. அங்கே பதில் சொல்லாமல் தப்பிச் செல்வதற்கு எந்த வழியும் இருக்காது.

தொடர்ந்து கூறினார்கள்: சுற்றுப்புறங்களில் நடப்பதைக் கண்டு தங்களுக்கு நேரப் போவது என்னவென்று அல்லாஹ்வை அறிந்து கொண்டவர்கள் உணர்வதால் அவர்கள் அப்படிப்பட்ட விஷயங்களால் மகிழ்ச்சி அடைவதில்லை; நிம்மதி பெறுவதும் இல்லை.

தொடர்ந்து கூறினார்கள்: வாய்ப் பேச்சால் அல்லாஹ் திருப்தி அடைவதில்லை. ஒரு மரணத்தை மேற்கொள்ளாமல் எவரும் அவனிடத்தில் உயிர் பெறுவதில்லை. இறைவனை அடைந்தவர்கள் ஒரு மரணத்தை ஏற்றுக் கொள்கின்றனர். இறைவன் அவரை ஏற்றுக் கொள்ளும்போது உலகிலும் அவர்கள் ஏற்புடையவர்களாகின்றனர்.

இங்கே பொதுவாக அல்லாஹ்வுக்காக தங்களின் செல்வாக்கையும், உற்றார் உறவினர்களையும் இழக்க நேருவதற்கு அஞ்சுகின்ற மக்களுக்கு ஆறுதல் கூறியுள்ளார்கள். அதாவது இங்கே சொல்லப்பட்ட மரணம் என்பது நீங்கள் நினைப்பதுபோல் அச்சுறுத்தக் கூடிய ஒன்றல்ல. மாறாக மனிதன் முழு உலகத் தொடர்பையும் துண்டித்துக் கொண்டால் அந்த மரணத்தை ஏற்றுக் கொண்ட உடனேயே அல்லாஹ் அவருக்கு அந்த புது வாழ்க்கையைக் கட்டாயமாக வழங்குகின்றான். இறந்த பின் எல்லாரையும் உயிர்ப்பிக்கும் இறைவன், இவ்வுலகில் மரணத்தை மேற்கொண்ட உங்களை கட்டாயம் உயிர்ப்பிப்பான். ஏன் அஞ்சுகிறீர்கள்? மரணத்தை மேற்கொள்ளுங்கள். உங்களுக்கு கண்ணியமும் கவுரவமும் வழங்கி வந்த செல்வங்களையும், நட்பு உறவுகளையும் நீங்கள் இழந்து மரணத்தை மேற்கொண்டால் அதன் பின் அனைத்தும் அல்லாஹ்வுக்கு எதிரில் மிகவும் அற்பமானவையாக உங்களுக்கு தெரியும். ஏனெனில் இறைவன் உங்களை ஏற்றுக் கொண்டால் உலகிலும் உங்களுக்கு ஏற்புடைமை கிடைத்து விடும். முதலில்

இறைவன், நான் இந்த அடியானை நேசிக்கிறேன் என அவனின் சிறப்பான மலக்குகளிடம் கூறுவான். அப்போது அந்த மலக்குகள் எல்லாம் அவரை நேசிக்கத் தொடங்குவர். இவ்வாறு அவர் குறித்த அன்பு மக்களின் தூய உள்ளத்தில் ஏற்படுத்தப்படுகிறது. அவர்கள் அவரை ஏற்றுக் கொள்வர். அப்படிப்பட்ட மக்களுள் ஒருவராக ஆகாத வரை மனிதன் பித்தளையும் செம்பும் ஆவான். அவன் மதிக்கப்படத் தகுந்தவன் அல்லன்.

பாருங்கள்! மரணம் மிகவும் அச்சுறுத்தத் தகுந்தது. ஆனால் உயிர் பெற்று எழுதலோடு அதனை தொடர்புபடுத்தி –னால் அதன் அச்சம் குறைந்து விடும். உயிர் பெற்றெழுதல் என்பதை மனிதன் மறுமையில்தான் காண்பான் என்றில்லை. இந்த உலகிலேயே காண முடியும். எனவே இவ்வுலகிலே மரணத்தை மேற்கொண்டு அல்லாஹ்விடமிருந்து புத்துயிர் பெறுமாறு நான் உங்களுக்கு கவனமூட்டுகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் மேற்கோளின் அடிப்படையில் கூறுகிறேன். அவர்கள் அதற்கான தெளிவான ஒரு சான்றை நம்முன் வைத்துள்ளார்கள். அதாவது இறையடியார்களாக விளங்கியவர்களைப் பாருங்கள். அவர்கள் எல்லாரும் இறைவனுக்காக இவ்வுலக வாழ்விலே ஒரு மரணத்தை மேற்கொண்டவர்களாவர். அவர்களுள் எவரையும் அல்லாஹ் இறந்த அந்த நிலையிலேயே விட்டு விடவில்லை. அவர்களுக்கு அல்லாஹ் புது கண்ணியமும் அருள்களும் இவ்வுலகிலேயே வழங்கினான். அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள புது வாழ்வையும் அருள்களையும் அவர்கள் தாமாக மேற்கொண்ட மரணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த இறையருள்களுக்கு எதிரில் அவர் மேற்கொண்ட மரணம், இறைவழியில் அவர் செய்த மிக மிக அற்பமான ஒரு தியாகமாகத் தென்படும். இறைவன் வழங்கிய புது வாழ்க்கையின் அருள்களின் முன்னால் அவருடைய முன் வாழ்க்கைக்கு எந்த மதிப்பும் இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தங்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் இந்தக் கருத்தை விளக்கிக் கூறினார்கள்: "நான் ஒரு துளியாக இருந்தேன்; அவனுடைய அருள் அந்த ஒரு துளியை கடலாக மாற்றியது. நான் மண்ணாக இருந்தேன்; அவன்தான் அந்த மண்ணை கார்த்திகை நட்சத்திரமாக மாற்றினான்." அந்தத் துளி என்ன? அந்த மண் என்ன? அவர்கள் இறைவனுக்காக செய்த தியாகங்களைத்தான் துளி என்றும் மண் என்றும் கூறுகிறார்கள். உலக வாழ்க்கையின் வழிவகைகளை தன் கைகளாலே இறைவனுக்காக மண்ணில் புதைத்து விட்டார்கள். உலக வாழ்வின் வழிவகைகள் இரண்டே இரண்டுதான்; தண்ணீரும் மண்ணும். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இறைவனுக்காக செய்த தியாகங் –களை ஒரு துளி என்றும் ஒரு பிடி மண் என்றும் கூறுகிறார்கள். ஆனால் அந்தத் தியாகத்தின் விளைவு என்ன? இன்று அல்லாஹ் அவர்களின் பெயரை முழு உலகிலும் எதிரொலிக்கச் செய்துள்ளான். அந்த ஒரு துளி இன்று முழு உலக மக்களுக்கும் கடலாக மாறி விட்டது. அந்த ஒரு பிடி மண் ஓர் உலகமாக மாற வேண்டியதிருந்தது. எவராலும் அதனைத் தடுக்க முடியாது.

நான் கூறும் இந்த விஷயங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் உண்மையாகும். எனவே இதனைப் புரிந்து கொள்ளவும் இதன்படி வாழவும் அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் புரிவானாக.

தமிழாக்கம்: மர்ஹூம் மவ்லவி முஹம்மது அய்யூப் ஸாஹிப்

உலகத் தொடர்புகளைப் பொருத்தவரை, ஒவ்வொரு பொருள் தொடர்பாகவும் தனிப்பட்ட சோதனை மனிதனுக்கு ஏற்படுகிறது. உலகம் நிலையற்றது என்றால் நான் சென்று விடுவேன் என்பது பொருளன்று. நிலையற்றது என்றால் என்னுடைய தொடர்புகள், என்னுடைய உறவுகள், என்னுடைய சம்பாத்தியங்கள் எல்லாம் என்னை விட்டுச் சென்று விடும் என்று பொருளாகும். சில வேளைகளில் நீங்கள் இருக்கும் போதே அவை சென்று விடும். சில வேளைகளில் நீங்கள் செல்வங்களை விட்டுச் சென்று விடுவீர்கள். இன்னும் சில வேளைகளில் நீங்கள் இருக்கும் போது செல்வங்கள் உங்களை விட்டுச் சென்று விடும். சில வேளை நீங்கள் உங்கள் அன்பர்களை விட்டுச் சென்று விடுவீர்கள். இன்னும் சில வேளைகளில் உங்கள் அன்பர்கள் உங்களை விட்டு விட்டு மறுமையின் பயணத்தை மேற்கொள்கின்றனர். (ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam